பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி02 வெள்ளிக்கிழமை 14.02.2025 கதிர் 098

## மன்னார் காற்றாலைத் திட்டம் அதானி நிறுவனம் கைவிட்டது

இந்தியப் பெரு நிறுவனங்களில் ஒன்றான அதானி குரூப்பைச் சேர்ந்த அதானி கிறீன் எனர்ஜி இலங்கையில் தனது இரு திட்டங்களில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளது. மன்னார் காற்றாலைத் திட்டம் மற்றும் பூநகரி சூரியகல மின்னுற்பத்தித் திட்டம் ஆகிய இரண்டிலிருந்தும் விலகுவதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

தீர்க்கப்படாத சுற்றுச்சூழல் பிரச்சினை மற்றும் நடந்து வரும் உச்சநீதிமன்ற வழக்கு, ஆளும்தரப்பில் திட்டத்தை முன்னெடுக்க அனுமதி வழங்குவதில் காணப்படும் தாமதங்களின் காரணமாகத் தாம் இந்தத் திட்டங்களில் இருந்து விலகுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களில் இருந்துதாம் 'மரியாதையுடன் விலகும்' முடிவை இலங்கை முதலீட்டுச் சபைக்கு (BOI) அதானி நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபைக்கு எழுதிய கடிதத்தில், இலங்கை மின்சார வாரியம் (CEB) மற்றும் அரச துறைகளுடன் இரண்டு ஆண்டுகள் நடத்திய பேச்சு மற்றும் 14 சுற்றுக் கலந்துரையாடல்களுக்குப் பின்னர், இந்தத் திட்டங்களைச் ☞ 8

## தமிழ் அரசுக் கட்சி வழக்கு 4 மாதத்துக்கு ஒத்திவைப்பு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு ஜீன் மாதம் நான்காம் திகதிக்குத் தள்ளிவைக்கப்பட்டது. நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, எதிராளிகள் தரப்பிற்குள் வழக்கை இணக்கமாக முடிப்பதற்கான ஒத்துழைப்பு இருக்காதமை மற்றும் எதிராளிகளின் கட்சித் தலைவர் மாவையின் இடத்திற்கு தற்போதைய தலைவர் சிவஞானத்தை பிரதியீடுவது ஆகியவற்றைக் கருத்திக்கொண்டு வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார்.

எதிராளிகளில் ☞ 8

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சி வழக்கு இப்போதைக்கு முடியும் சாத்தியங்கள் தெரியவில்லை. இன்னும் ஓராண்டு கடந்தாலும் வழக்கு முடியும் போன்றும் தோன்றவில்லை. இதில் விசித்திரம் என்னவென்றால், மத்திய குழுத் தீர்மானத்தின்படி செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டவரான குதாசனை நீக்கவேண்டும் என்று மத்தியகுழுவில் குழப்பம் விளைவிக்கப்போய்த்தான் இந்தப் பிரச்சினை இவ்வளவு பெரிதாகியது. செயலாளர் ☞ 2

## அமெ. தூதரை வெளியேற்ற சரத் வீரசேகர வலியுறுத்து

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கை வோஷிங்டன் திருப்பி அழைத்துக்கொள்ள வேண்டும் என்று பொது ஜன பெரமுன கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் பிரிவினைவாதிகளுடன் ஒன்றிணைந்து இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டுள்ளார். போராட்டக்காலப் பகுதியிலும் அவர் முறையற்ற ☞ 2



## ஏப்ரல் 22 – 25க்கு இடையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஏப்ரல் 22 முதல் 25க்கு இடைப்பட்ட நாள் ஒன்றில் நடக்கும் என்று எதிர்வுகூறப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) மசோதாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான உச்ச நீதிமன்றத்தின் தீர்மானம், இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறும் சிறப்பு அமர்வின் போது சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் இந்தத் தகவல் வந்துள்ளது.

பெப்ரவரி 10 சபாநாயகரால் வெளியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானி அறிவிப்பு மூலம் இன்றைய சிறப்பு நாடாளுமன்ற அமர்வுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, நாடாளுமன்றம் இன்று காலை 9.30 மணிக்கு கூடுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) மசோதாவுக்கு எதிராக தாக்கல்செய்யப்பட்ட மனுக்கள்மீதான உச்ச நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் நாடாளுமன்றத்திற்கு அறிவிப்பதற்காக இந்த அமர்வு திட்டமிடப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டவரைவு மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் திங்கட்கிழமை (பிப்ரவரி ☞ 2

# செம்மணி சுடலையில் மனிதப் புதைகுழியா?

### சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் குழி தோண்டியபோது மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் அமைந்துள்ள சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மின் தகன எரியூட்டி அமைப்பதற்காகத் தோண்டப்பட்ட கிடங்கில் மனித எலும்பு எச்சங்கள் காணப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 1998 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் காணாமலாக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் கொல்லப்பட்ட பின்னர் செம்மணி வயல்வெளிப் பகுதியில் புதைக்கப்பட்டனர் என்று கிருஷாந்தி கொலை வழக்கின்



குற்றவாளியான இராணுவக் கோப்ரல் வாக்குறுதியளித்திருக்கும் நிலையில், ☞ 2

## ரி -56 துப்பாக்கியுடன் தப்பிய கான்ஸ்டபிள்

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ரி-56 துப்பாக்கியுடன் தலைமறைவாகிய பின்னர் துப்பாய்க்குத் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து தப்பிச் சென்ற கான்ஸ்டபிளின் காதலி எனக் கூறப்படும் நடன ஆசிரியை ஒருவரிடமிருந்து கல்கிசைப் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். எஹெலியகொடவில் உள்ள ஒரு நடன ஆசிரியரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த கான்ஸ்டபிள் துபாய்க்கு தப்பிச் செல்வதற்கு முன்பு எஹெலியகொட பகுதியில் நடன ஆசிரியரைச் சந்தித்து, பின்னர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்து நாட்டைவிட்டு வெளியேறியிருக்கிறார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

## நெல் கொள்வனவு ஆரம்பம்

உத்தரவாத விலையில் நெல் கொள்வனவை ஆளும்தரப்பு நேற்று மாலை அம்பாறை மாவட்டத்தில் தொடங்கியது.

அம்பாறை விவசாயி ஒருவர் மாலை 5 மணியளவில் உத்தரவாத விலையில் தனது நாட்டு நெல் அறுவடையை விற்று, பெரும்போகத்தின் முதல் நெல் இருப்பை அரசிடம் ஒப்படைத்தார்.

தாசுன் சானக ஹேரத் என்ற விவசாயி கொடுத்த நெல் இருப்பில் 650 கிலோ நெல் இருந்தது. அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம, நெல் சந்தைப்படுத்தல் சபையின் அம்பாறை பிராந்திய முகாமையாளர் என். எஸ். சேனநாயக்க, மாவட்ட விவசாய பணிப்பாளர் துஷார பெரேரா, கிடங்கு அதிகாரி பிரியந்த குமார ஆகியோர் கலந்து கொண்டனர்.



### சித்திரவதை செய்து பொய் வழக்கு போட்ட

## பொலிஸ் சார்ஜன்ட்கள் இருவருக்கு தண்டனை

சந்தேகநபர் ஒருவரை அடித்துத் துன்புறுத்தி வாக்குமூலம் பெற முயன்ற பின்னர் பொய் வழக்குத் தாக்கல் செய்த குற்றத்திற்காக இரு பொலிஸ் சார்ஜன்ட்டுகளுக்கு உயர் நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்டவருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் இழப்பீடும் வழக்குச் செலவாக தலா 25 ஆயிரம் ரூபாயும் வழங்கும்படி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திருட்டு குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்க மறுத்ததை அடுத்து அவரை அடித்துத் துன்புறுத்திய ☞ 8

## இலங்கையில் இரு திட்டங்களை நிறுத்துகின்றது அமெரிக்க அரசு

### யு.எஸ்.எய்ட் மூலம் மேற்கொள்ளப்பட்டவை

இலங்கையில் யு.எஸ்.எய்ட்டால் நிதியளிக்கப்பட்ட இரண்டு திட்டங்களை நிறுத்த அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

அமெரிக்க அதிபராக மீண்டும் பதவியேற்றுள்ள ட்ரம்ப் கூட்டாட்சி நிதி முறைகேடுகளை விசாரிக்க நிறுவிய அரச செயல்திறன் துறை (DoDGE - டாட்ஜ்) இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உலகின் மிகப் பெரிய பணக்காரரான எலோன் மஸ்க் தலைமையில் செயற்படுகின்றது இந்தத் துறை.

அமெரிக்கா நிதி வீணடிக் மீமீமீமீமீமீமீகப்படுகிறது என்று கருதிய 199 உலகளாவிய திட்டங்களை நிறுத்த ☞ 8

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

அப்போது சுமந்திரன் தரப்பு ஆளாகப் பார்க்கப்பட்டார். அதனால், கட்சியின் கட்டுப்பாடு அவரிடம் போய்விடக்கூடாது என்று கட்சிக்குள் சிலர் பயந்ததன் விளைவே பிரச்சினையைப் பூதாகாராக்கியது. ஆனால், இப்போது நிலமையோ தலைகீழ், நேற்றைய வழக்கு விசாரணையில் கட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரும் செயலாளரும் ஒரே நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். அதாவது ஒரே பக்கத்தில் அவர்கள் இருவரும்.

மத்திய குழுவை மீண்டும் 300க்கும் மேற்பட்டவர்களுடன் நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் தலைவரும் செயலாளரும் இணைந்து நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைத்துள்ளனர். சுமந்திரன் தரப்போ யாப்பின்படி 156 பேருடன் அது நடத்தப்படுவதற்கே கட்சியின் மத்திய குழு இணங்கி அனுமதித்தது என்ற நிலைப்பாட்டினை வலியுறுத்தியிருக்கின்றது. செயலாளர் தலைவர் பக்கம் சாய்வார் என்று முன்னரே தெரிந்திருந்தால் இந்தப் பிரச்சினையை இவ்வளவு பெரியதாக்கி இருக்கத் தேவையில்லையோ என்னவோ. அதைக் கணிக்கத் தெரியாத, தெரிந்தெடுக்கப்பட்டிருப்பவரை தனது பக்கம் சாய்கத் தெரியாத ஒருவர் தலைவர் இப்போது தானும் பதவியேற்க முடியாமல் கட்சியையும் பொறுப்பெடுக்க முடியாமல் தவிக்கிறார். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப்போன்றுதான் இருக்கிறது இந்தக் கதை.

................................

அரசு அச்சகத் துறையில் ஒரு காவல் அதிகாரிக்கும் பல ஊழியர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. உள்ளூராட்சி தேர்தல் பணிகள் தொடங்கவுள்ள நிலையில் இந்த மோதல் பரபரப்பைக் கிளப்பியுள்ளது.

வாக்குவாதத்தின் போது, பாதுகாப்பு அதிகாரி பாதுகாப்பு அறையில் இருந்து ஒரு கத்தியை எடுத்து ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எதிராக மிரட்டல் விடுத்தார் என்று கூறப்படுகிறது.

இந்த சம்பவத்திற்கு பதிலளிக்கும் விதமாக, வாக்குமூலம் அளிக்க அந்த அதிகாரி பொரெல்லா பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார். விரைவில் இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இல்லையேல் தொழிற்சங்க நடவடிக்கை, பணிப்புறக்கணிப்பு என்று பிரச்சினை மேலும் விரிவாக்கமடையும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## செம்மணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மயானத்தில் எலும்புகள் காணப்படுவது பல்வேறு சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது. ராஜபக்சவின் வாக்குமூலத்தின்படி நடத்தப்பட்ட சோதனைகளில் இந்தப் பகுதியிலிருந்து 15 பேரின் மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டிருந்தன. செம்மணிப் புதைகுழி வழக்கு என்று இது புகழ் பெற்றிருந்தது. இப்போது அதே வயல் வெளிப் பகுதியில் அமைந்துள்ள மயானத்திலேயே மீண்டும் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச சபையால் சிந்துப்பாத்தி மயானத்தில் மின் தகன எரியூட்டி அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய மயானத்துக்குள் கிடங்குகள் வெட்டியபோது மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது. இது இந்து மயானம் என்பதால் இங்கு எலும்புகள் மண்ணில் புதையுண்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் அரிது என்பதே சந்தேகங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் காரணமாகி இருக்கின்றது.

மின் எரியூட்டி அமைப்பதற்கான வேலையைப் பொறுப்பெடுத்த ஒப்பந்தக்காரர்கள், தோண்டப்பட்ட குழிகளில் எலும்பு எச்சங்களைக் கண்டதை அடுத்துப் பணிகளை இடைநிறுத்தினர். நல்லூர் பிரதேச சபைக்கு விடயம் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வருகைதந்த பிரதேசசபைச் செயலர் உள்ளிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சித்துப்பாத்தி மயான அபிவிருத்திப் பணி உறுப்பினர்கள் ஆகியோர் மனித எலும்பு எச்சங்களைப் பார்வையிட்டனர். அவை மயானத்தில் புதைக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் உடல் எச்சங்களாக இருக்கலாம் என்று கருதி ஒப்பந்தப் பணியைத் தொடரும்படி தெரிவித்தனர்.

இந்தப் பகுதி மனிதப் புதைகுழியாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், மயானத்திற்குள் மனித எலும்புகள் காணப்படுவதைப் புறக்கணித்துத் தம்மால் அங்கு பணிகளைத் தொடர முடியாது என்று ஒப்பந்தகாரர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனர்.

அந்தப் பகுதியில் மூன்று குழிகள் வெட்டப்பட்ட நிலையில் இரண்டு குழிகளில் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் காணப்பட்டதாக ஒப்பந்தகாரர்கள் தெரிவித்துள்ளனர்.

செம்மணிப் புதைகுழிக்குரிய சர்ச்சைக்குரிய பகுதியாக இருந்தபோதும் மயானத்தில் எலும்பு எச்சங்கள் காணப்பட்டமை குறித்து தீர ஆராய்ந்து அதனை பொலிஸார் மற்றும் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவராமல் புறக்கணிக்க எத்தனிக்கும் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் மற்றும் அதிகாரிகளின் செயற்பாடுகள் குறித்து கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

## ஏப்ரல் 22....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

17) பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை நடைபெறும்.

இந்த சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால், மறுநாளே உள்ளாட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை மீண்டும் கோரும் அதிகாரம் தேர்தல் ஆணையகத்திற்கு இருக்கும். தற்போதுள்ள சட்டங்களின்படி தேர்தல் குறைந்தபட்ச நாட்களுக்குள் அறிவிக்கப்பட்டால், ஏப்ரல் 11 ஆம் தேதி நடத்தப்படும்.

இருப்பினும், அந்தத் திகதியில் தேர்தலை நடத்துவதில் பல நடைமுறைச் சவால்கள் காணப்படும் என்பதால் ஏப்ரல் இறுதி வாரத்தில் தேர்தலை நடத்துவதே பொருத்தமான தெரிவாக அமையும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. தேர்தலுக்காக 340 வகையான வாக்குச் சீட்டுகளை அச்சிட வேண்டியிருக்கும், ஏப்ரல் 11இற்குள் இது சாத்தியமில்லாததாக இருக்கும்.

இந்தக் காலப் பகுதி பௌத்த மற்றும் இந்து புத்தாண்டுக் கொண்டாட்டக் காலப்பகுதி என்பதாலும் தேர்தலை அந்த நாள்களில் நடத்துவது உகந்ததல்ல என்று கருதப்படுகின்றது. அத்தகைய நிலையில், ஏப்ரல் 20 முதல் ஏப்ரல் 30 வரை தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மிகவும் பொருத்தமான தேதிகள் ஏப்ரல் 22 அல்லது ஏப்ரல் 25 என்று கருதப்படுகின்றது.

## பலாலி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் ஜூலி சங் இலங்கையின் இறையாண்மைக்கும், சுயாட்சிக்கும் சவால் விடுக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டுள்ளார். அத்துடன் வியன்னா ஒப்பந்தத்தையும் மீறியுள்ளார்.

எமது ஆளும்தரப்புக்கு எதிரான போராட்டத்தின் போது அமெரிக்க தூதுவர் முறையற்ற வகையில் செயற்பட்டார். பிரிவினைவாதிகளுடன் ஒன்றிணைந்து செயற்பட்டார். ஆளும்தரப்புக்கு எதிரான போராட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார். ஆகவே இவரை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைத்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு அமெரிக்க ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறோம்.

பாலினம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் நிறுவனம் பல மில்லியன் டொலர்களை செலவழித்துள்ளாக அமெரிக்காவின் புதிய ஆளும்தரப்புக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் கலாசாரத்தை சீரழிப்பதற்காகவே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆகவே இவ்விடயம் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், நிதி பெற்றுக் கொண்டவர்களின் விவரங்களை பகிரங்கப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இரு பொலிஸ் சார்ஜன்ட்டுகளும் அவர் மீது ஹெரோயின் வைத்திருந்தார் என்று வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இப்படி சித்திரவதை செய்து பொய் வழக்குப் போட்டு சந்தேகநபரை விளக்கமறியலில் வைத்ததன் மூலம் சந்தேகநபரின் அடிப்படை உரிமை மீறப்பட்டதாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அனுராதபுரம் மீகொடவெவ பகுதியைச் சேர்ந்த சச்சித்த பிரபாத் விஜேரத்ன என்ற இளைஞர் தாக்கல் செய்த இந்த அடிப்படை உரிமைமீறல் மனு மீதான தீர்ப்பு, நீதியரசர்கள் பிரீதி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று வழங்கியது.

மனுவின் பிரதிவாதிகளாக அனுராதபுரம் இன்ஸ்பெக்டர் சந்திரசிறி, போலீஸ் சார்ஜன்ட்களான சம்பத் மற்றும் நிஷாந்த ஆகியோர் பெயரிடப்பட்டிருந்தனர். விசாரணையின் முடிவில் இரு சார்ஜன்ட்களையும் குற்றவாளிகளாகக் கண்ட நீதிமன்றம், பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீட்டை வழங்குமாறு உத்தரவிட்டது. ஒரு மாதத்திற்குள் இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்றும் நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு செய்துள்ளதாகவும், ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் கீழ் இலங்கையில் அத்தகைய இரண்டு திட்டங்கள் இருப்பதாகவும் 'டாட்ஜ்' அறிவித்துள்ளது.

நிறுத்தப்படும் இரண்டு திட்டங்களில் ஒன்று, இலங்கையை காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப மாற்றியமைக்க உதவும் திட்டம் என்றும், மற்றொன்று தகவல் தொடர்பு குறித்த பட்டறைகளை நடத்தும் திட்டம் என்றும் 'டாட்ஜ்' தெரிவித்துள்ளது.

அமெரிக்க வரி செலுத்துவோர் பணத்தை வீணடிப்பதாகக் கருதப்படும் 199 திட்டங்களை நிறுத்துவதன் மூலம் 250 மில்லியன் டொலர்கள் சேமிக்கப்படும் என்றும் 'டாட்ஜ்' கூறுகின்றது.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படுத்துவதற்கான பெரும்பாலான ஒப்புதல்களை நிறுவனம் பெற்றுள்ளதாக அதானி கிரீன் உறுதிப்படுத்தியுள்ளது. இருப்பினும், இந்த திட்டம் குறித்து மீண்டும் பேச்சு நடத்த அமைச்சரவையால் புதிய குழு ஒன்று நியமிக்கப்பட்ட நிலையிலும் திட்டங்கள் பற்றி மீளாய்வு செய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்ட நிலையிலும் தாம் இந்தத் திட்டங்களில் இருந்து விலகுவதாக அது தெரிவித்துள்ளது.

இந்த முதலீட்டில் இருந்து விலகும் அதே வேளையில், அரசாங்கம் எந்தவொரு புதிய திட்டங்களுக்கும் குழுவை அழைத்தால் இலங்கையில் எதிர்கால வாய்ப்புகளை கருத்தில் கொள்ள அதானி கிரீன் தனது விருப்பத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

## தமிழ் அரசுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரான மாவையின் இடத்திற்கு சிவஞானத்தை மாற்றுவது குறித்து ஜூன் மாதமே தீர்மானிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி பயஸ் ரஸாக் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை இணக்கமாக முடிவுறுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காகவே இன்று வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. எனினும், வழக்கின் எதிராளிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமான சிறீதரன், குகதாசன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் ஆகியோர் சார்பில் வழக்கை முடிவுறுத்துவதற்காக நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட அறிக்கை குறித்து நேற்று இணக்க நிலை ஒன்று ஏற்படவில்லை.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கட்சியின் மத்திய குழு ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கையில் இந்த மூவரும் அந்தத் தீர்மானத்திலிருந்து விலகி ஒரு முடிவை முன்வைத்திருக்கிறார்கள் என்று சுமந்திரன் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். அதுவும் முன்னைய இணக்க ஏற்பாடுகளுக்கு மாறாக முன்வைத்து, இணக்கத்துக்கான வாய்ப்பை வேண்டுமென்றே குழப்பி அடிக்க முயன்றுள்ளனர் என்றும் அவர் குற்றஞ்சுமத்தினார்.

சுமந்திரன் தமது தரப்பில் தாமே முன்னிலையானார். கட்சியின் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் மற்றும் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி சயந்தன் முன்னிலையானார். கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவர் இரத்தினவடிவில் சார்பிலும் சட்டத்தரணி ஒருவர் முன்னிலையானார்.

சுமந்திரன், சத்தியலிங்கம், குலநாயகம், இரத்தினவடிவேல் ஆகிய எதிராளிகள் கட்சியின் மத்திய குழுத் தீர்மானப்படி யாப்பின் அடிப்படையில் 156 உறுப்பினர்களுடன் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கான இணக்கத் திட்டத்துக்குத் தாங்கள் சம்மதிக்கின்றார்கள் எனத் தெரிவித்தனர். அதேசமயம் சிறீதரன், குகதாசன், யோகேஸ்வரன் ஆகியோர் 324 உறுப்பினர்களுடன் கடந்த தடவை நடந்தது போலவே கட்சியின் மத்திய குழுவை மீண்டும் கூட்டும் திட்டத்தை வலியுறுத்தினர். இதையே ஆரம்பத்தில் எதிராளியான சுமந்திரனும் ஏற்றுக்கொண்டிருந்தார் என்று அவர்கள் மூவர் சார்பிலும் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரன் தெரிவித்தார்.

வழக்கின் எதிராளிகளுக்கு இடையே கருத்து முரண்பாடு இருப்பதை விசனத்துடன் சுட்டிக்காட்டிய வழக்காளி தரப்பு சட்டத்தரணி, இக்காரணத்தால் இணக்கமான தீர்வு காண்பதற்கான வாய்ப்புகள் அருகி உள்ளன என்றும், விசாரணை நடத்தியே இதற்கு முடிவுகாணவேண்டும் எனவும் சுட்டி காட்டினார். இதையடுத்து வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கின் எதிராளிகளில் ஒருவரான கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா உயிரிழந்துள்ளதை அடுத்து, அவரது இடத்துக்கு தற்போதைய தலைவரின் பெயரை வழக்கில் எதிராளியாகச் சேர்ப்பதா என்பது குறித்துத் தீர்மானிப்பதற்காக வழக்கு ஜூன் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அந்தத் திகதியில் கட்சியின் தற்போதைய தலைவர் எனக் கருதப்படுபவர் வழக்காளியாகச் சேர்க்கப்பட வேண்டுமா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்தது.



# ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் வருடாந்தப் பேராளர்கள் மாநாடு

(அஷ்ரப்கான்)

ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் வருடாந்த பேராளர் மாநாடு கொழும்பு மருதானை குப்பியாவத்தை மாநகர மண்டபத்தில் முன்னாள் அமைச்சரும், அக்கட்சியின் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத்தின் நெறிப்படுத்தலில் புதன்கிழமை நாட்டின் பல்வேறு பிரதேச பேராளர்களின் பிரசன்னத்துடன் விமரிசையாக நடைபெற்றது.

ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் யாப்பில் திருத்தமொன்றை மேற்கொண்டு சிரேஷ்ட பிரதித்தலைவர் எனும் பதவி நீக்கப்பட்டு சிரேஷ்ட தலைவர் எனும் பதவி புதிதாக இணைக்கப்பட்டு அப்பதவிக்கு முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவுசெய்யப்பட்டார்.

மேலும் புதிய தவிசாளராக மௌலவி ஐ.எல்.எம். மிப்ளால் அவர்களும் அண்மையில் தனது செயலாளர் பதவியை இராஜினாமா செய்த முன்னாள் அமைச்சர் எம்.ரீ. ஹசனலியின் இடத்திற்கு புதிய செயலாளராக கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ. கலீலுர் ரஹ்மானும், பொருளாளராக எச்.எம். ஹக்கீம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

மேலும், தலைவர் ஒன்று எனும் பதவிக்கு அக்கறைப்பற்றை சேர்ந்த அக்பர் அலியும், தலைவர் இரண்டு எனும் பதவிக்கு சாய்ந்தமருதை சேர்ந்த கலாநிதி ஹக்கீம் செரீப், தேசிய அமைப்பாளராக கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.பி.காதர், தேசிய பிரசார செயலாளராக கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் முஸம்மில், தேசிய இணைப்பு செயலாளராக டாக்டர் முஹம்மட் பரீட், உலமா பிரிவின் தலைவராக முஹம்மட் ஆமீர் முப்தி உட்பட பல நிர்வாகிகளும் இதன்போது தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இந்த பேராளர் மாநாட்டின் பிரகடனமாக பலஸ்தீன் சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட வேண்டும், காஸ்மீருக்கு இந்தியாவும், பாகிஸ்தானும் சுதந்திரமளிக்க முன்வர வேண்டும், ஜனாஸா எரிப்புக்கு எதிராக விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும், அந்த எரிப்பில் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும், ஈஸ்டர் தாக்குதலில் பழி சுமந்துள்ள முஸ்லிங்களின் மீது குத்தப்பட்ட வீணான சொற்பிரயோகங்கள் களையப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும், இவ்வாறான தாக்குதல்களை ஒரு சமூகத்தின் மீது சுமத்தாமல் அரசே பொறுப்பேற்க வேண்டும், சுதந்திரத்திற்கு பின்னரான அமைச்சரவையில் இப்போதைய அமைச்சரவையிலே முஸ்லிங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளார்கள் அந்த விடயம் நிவர்த்திக்கப்பட வேண்டும், மேல் மாகாணத்தில் கொழும்பு போன்ற பிரதேசங்களில் முஸ்லிங்களின் கல்வியை மேம்படுத்த தேவையான வசதிகளை அரசு வழங்க முன்வர வேண்டும், முஸ்லிங்கள் கல்வி கற்க புதிய பாடசாலைகள் உருவாக்கப்பட






வேண்டும் என்றும் முன்மொழியப்பட்டு பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.

நீண்டகாலமாக ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு பணியாற்றிவந்த பலருக்கும் உயர்பீட உறுப்பினர் பதவிகள் உட்பட முக்கிய பல பொறுப்புக்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

# பௌர்ணமி கலை விழா

(துஷாரா, அபு அலா)

மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இணைந்து நடத்திய பௌர்ணமி கலை விழா காந்தி பூங்காவில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் நா.தனஞ்செயன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு கிழக்கு மாகாணம் கல்வி அமைச்சு செயலாளர் கே.குணநாதன் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன், சுவாமி விவேகானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பனிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கெனடி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில் நடனம், கிராமிய நடனம், சக்தி தாண்டவம், நாட்டுக்கூத்து, பறங்கியர் இசை பாடல்கள் போன்றன இடம்பெற்றன.








# ‘எந்நாட்டவர்க்கும் இறைவன்’ திருமலையில் நூல் அறிமுகம்

(அபு அலா)




அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமி (கவிஞர் பாரதி பாலன்) எழுதிய திருவாதவூரர் மாணிக்கவாசகர்தம் ‘எந்நாட்டவர்க்கும் இறைவன்’ நூல் அறிமுக விழா நாளை (சனிக்கிழமை) திருகோணமலை நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக தீபகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை ஶ்ரீபத்ர காளியம்மாள் தேவஸ்தான பிரம்மஶ்ரீ சோ.ரவிச்சந்திர குருக்கள் மற்றும் திருகோணமலை மறைமாவட்ட ஆயர், ஆண்டகை பேரருட்திரு நோயேல் இம்மானுவேல் ஆகியோருடன் சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவம், இலங்கை, கிழக்கு பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் அறம் கூறும் மாணிக்க மாணிக்கவாசகர் அருட்பணி அ.அ.நவரெத்தினம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கும் இவ்விழாவில் சல்லியம்பாள் மகா வித்தியாலய மாணவர்களின் வரவேற்பு நடனமும் இடம்பெறவுள்ளது.

தலைமை உரை மற்றும் வரவேற்பு உரையை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக தீபகாந்தனும், நூல் அறிமுக உரையை

# ஊடகவியலாளர் காலமானார்

(சியாஜ்)

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் விமலசேன நம்முனி 81 ஆவது வயதில் காலமானார்.

1991 ஆம் ஆண்டு எத்த என்ற சகோதர மொழி பத்திரிகையுடன் தனது ஊடக பயணத்தை ஆரம்பித்த விமலசேன அதன் பின்னர் திவயின, லக்பிம, லங்காதீப மற்றும் தினமின ஆகிய சிங்க மொழி பத்திரிகைகளின் மஹாவெள பிராந்திய நிருபராகப் பணியாற்றினார். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

மறைந்த விமலசேனவின் உடல் மஹாவெள, லுனுஓயாவில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது அன்னாரின் இறுதிச் சடங்கு சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு மஹாவெள பொது மயானத்தில் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# நம்பிக்கைச் சிதைவு

இந்தியப் பெரு நிறுவனமான அதானி கிறீன் எனர்ஜி இலங்கையில் தனது இரு திட்டங்களில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளது. மன்னார் காற்றாலைத் திட்டம் மற்றும் பூநகரி சூரியகல மின்னுற்பத்தித் திட்டம் ஆகிய இரண்டிலிருந்தும் அந்த நிறுவனம் விலகியுள்ளது.

இவற்றில் மன்னார் காற்றாலைத் திட்டத்திற்குக் கடுமையான எதிர்ப்புக் காணப்பட்டது. மன்னார் மக்களே அதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டுவந்தனர். மன்னார் தீவுக்குள் மிக ஒடுங்கிய நிலப்பரப்பே காணப்படும் நிலையில் அங்கு காற்றாலைகளை அமைக்க எடுக்கப்பட்ட முயற்சி மக்களிடம் வரவேற்புக்குரியதாக இருக்கவில்லை. அந்தக் காற்றாலைகள் தமது வாழ்வுக்கு இடைஞ்சலாக இருப்பதாக அவர்கள் கருதுகின்றார்கள்.

அதேநேரம், மன்னார் தீவுக்குள் காற்றாலைகள் அமைக்கப்படுவது சுற்றுச்சூழலியலாளர்களின் கடும் எதிர்ப்புக்குரியதாகவும் இருந்தது. வலசை வரும் பறவைகளின் இலங்கைக்கான நுழைவாயிலாக இந்த மன்னார் தீவுப் பகுதியே இருப்பதால் பிரமாண்டமான இந்த காற்றாலைகளால் அவற்றின் இயற்கைப் புலம்பெயர்வு பாதிக்கப்படும் என்று அவர்கள் கருதுகின்றார்கள். அதனால் இந்தத் திட்டத்தை எதிர்த்து அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்தனர்.

தனதுதேர்தல்காலவாக்குறுதியில்இந்தத்திட்டம்கைவிடப்படும் என்று அரசுத் தலைவர் அநுரகுமார உறுதியளித்திருந்தார். நாடாளுமன்றத் தேர்தலிலும் அந்த வாக்குறுதி தொடர்ந்தது. அந்த வகையில் பார்த்தால் அதானி நிறுவனம் இந்தத் திட்டங்களைக் கைவிட்டதென்பது பாரதூரமான விடயங்கள் இல்லை. மக்களின் விருப்பத்திற்கு மாறான, அவர்களின் ஒத்துழைப்பற்ற திட்டங்களைத் திணிப்பது ஆளும்தரப்புக்குமே சிக்கலானது என்பதால் மன்னார் திட்டம் நிறுத்தப்பட்டது பெரியளவில் சிக்கலுக்குரியதல்ல.

அதேநேரம், அதானி நிறுவனம் தான் இந்தத் திட்டத்தில் இருந்து விலகுவதற்காகக் குறிப்பிட்டுள்ள காரணங்களில் ஒன்று மிகவும் கூர்ந்து கவனிக்கவேண்டியது.

தீர்க்கப்படாத சுற்றுச்சூழல் பிரச்சினை மற்றும் நடந்து வரும் உச்ச நீதிமன்ற வழக்கு, ஆளும்தரப்பில் திட்டத்தை முன்னெடுக்கஅனுமதிவழங்குவதில்காணப்படும்தாமதங்களின் காரணமாகத் தாம் இந்தத் திட்டங்களில் இருந்து விலகுவதாக அதானி நிறுவனம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களில் இருந்து தாம் 'மரியாதையுடன் விலகும்' முடிவை இலங்கை முதலீட்டுச் சபைக்கு (BOI) அதானி நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபைக்கு எழுதிய கடிதத்தில், இலங்கை மின்சார வாரியம் (CEB) மற்றும் அரச துறைகளுடன் இரண்டு ஆண்டுகள் நடத்திய பேச்சு மற்றும் 14 சுற்றுக் கலந்துரையாடல்களுக்குப் பின்னர், இந்தத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான பெரும்பாலான ஒப்புதல்களை நிறுவனம் பெற்றுள்ளதாக அதானி கிரீன் உறுதிப்படுத்தியுள்ளது. இருப்பினும், இந்த திட்டம் குறித்து மீண்டும் பேச்சு நடத்த அமைச்சரவையால் புதிய குழு ஒன்று நியமிக்கப்பட்ட நிலையிலும் திட்டங்கள் பற்றி மீளாய்வு செய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்ட நிலையிலும் தாம் இந்தத் திட்டங்களில் இருந்து விலகுவதாக அது தெரிவித்துள்ளது.

இது ஆளும்தரப்பு தனது முடிவுகளைத் தீர்க்கமாக எடுத்து அதனை உறுதியுடன் வெளிப்படுத்தும் தற்றுணிபற்றது என்பதைக் காட்டி நிற்கின்றது. மக்கள் நலன் சார்ந்த தெளிவான முடிவுகளை உறுதியாக எடுப்பதற்குப் பதில் காலத்தை இழுத்தடித்தல், குழுக்களை நியமித்தல் ஆகிய உத்திகள் மூலம் தமது ஒத்துழையாமையை ஆளும்தரப்பு வெளிப்படுத்தியுள்ளதையே அதானி நிறுவனத்தின் அறிவிப்புக் காட்டுகின்றது.

தனது தேர்தல் கால வாக்குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றும் விடயத்திலேயே உறுதியான, தெளிவான முடிபுகளை தற்றுணிபோடு எடுக்க முடியாத இந்த ஆளும்தரப்பு எப்படி இதைவிடப் பெரிய விடயங்களில் தற்றுணிபோடு முடிவுகளை எடுக்கப்போகின்றது என்கிற சந்தேகத்தை இது எழுப்புகின்றது. குறிப்பாக புதிய அரசமைப்பு உருவாக்கம் போன்ற நீண்டகால குழப்பகரமான விடயங்களில் தெளிவாகச் செயற்படும் தற்றுணிபு இந்த ஆளும்தரப்புக்கு இருக்கும் என்று நம்பமுடியவில்லை. இதற்கு முந்தைய ஆட்சியாளர்கள் பின்பற்றிய காலத்தைக் கடத்தும், ஒளித்துப் பின்வாங்கும் உத்திகளையே இந்த ஆட்சியாளர்களும் கைக்கொள்வது தீர்வு குறித்த நம்பிக்கைகளைச் சிதைக்கிறது.

# ஆறிப்போன தழும்புகள்

**என்.சத்திய மூர்த்தி**

தாங்கள் 'கப்பல் விட்ட சமூகத்தினர்' என்றும், அமைச்சர் சந்திரசேகர் 'கப்பலில் வந்திறங்கியவர்' என்றும் தலைமுறைகளுக்கும் கொச்சைப்படுத்தி பேசிய சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் இராமனாதன் அர்ச்சுனாவைக் கடிந்தோ, கண்டித்தோ எந்தவொரு வட மாகாண அரசியல்-சமூக தலைரும் கருத்து தெரிவிக்காதது வருந்தத்தக்கது. அதுபோன்றே, எதற்கெல்லாமோ தலையங்கங்கள் எழுதும் யாழ்பாண பத்திரிகை ஆசிரியர்கள், அவரது கீழ் தர அரசியலை ஆமோதிப்பது போல் அமைதிகாப்பதும் வேதனைக்குரியது.

தேர்தல் அரசியலில் நேரடியாகக் குதித்து நாடாளுமன்றத்திற்கும் முதல் முயற்சியிலேயே வெற்றிபெற்ற மருத்துவர் அர்ச்சுனாவின் கொச்சைத்தன அரசியல் தலைநகர் கொழும்புவில் சிரிப்பாய் சிரிக்கிறது. இங்கே யாழ்பாணத்திலும் நிலைமை அதேதான். முன்பு ஒரு முறை பொலிசாரால் கைது செய்யப்பட்டு பிணையில் இருக்கிறார். இதற்கிடையில், இந்தக் கிழமையில்கூட நகரத்தில் ஓர் உணவு இல்லத்தில், அர்ச்சுனா யாரையோ அடித்து உதைப்பதாக வீடியோ காட்சிகள் வெளியாகி உள்ளன. அது குறித்து இரு தரப்பினரும் பொலிஸிடம் முறையிட்டு அது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, செய்திகள் தெரிவிக்கின்றன.

### நான்கு பிரச்சினைகள்

இதே பாதையில் அர்ச்சுனா தொடர்ந்து பயணித்தால், எதிர்வரும் காலங்களில், சுயாதீன வேட்பாளர்களை 'மெத்தப் படித்த' தமிழ் மக்கள் ஒதுக்கித் தள்ளும் காலம் மீண்டும் வந்துவிடும். அவ்வாறு ஒதுக்கப்பட்டோரின் பட்டியலிலும் அவருடைய பெயரே முதலில் இருக்கும். இதுவும் வருத்தத்திற்குரிய விடயமே.

அமைச்சர் சந்திரசேகர் விடயத்தை பொறுத்தவரையில், இங்கு நான்கு தனிப் பிரச்சினைகள் ஒன்றாகக் கலந்துள்ளன. முக்கியமாக, நாட்டின் அமைச்சர் ஒருவரை இந்த அளவிற்கு அவமானப்படுத்தி யாரும் அண்மைக் காலத்தில் பேசியதில்லை. அதுவும் குறிப்பாக, கலாசாரத்தில் தங்களை முன்னிறுத்தி அரசியல் செய்யும் இலங்கைத் தமிழர் மத்தியில் இருந்து, குறிப்பாக தன்னைத் தானே தம்பட்டம் அடித்துக்கொள்ளும் யாழ்பாண மக்களில் ஒருவர்கூட இதுவரை இதுபோன்று நடந்துகொண்டதில்லை.

இரண்டாவது, சந்திரசேகர் என்ற தனி மனிதரின் தன்மானம் குறித்த விடயம். இதில் மூன்றாவது. 'கப்பலில் வந்திறங்கியவர்கள்' என்று மருத்துவர் அர்ச்சுனா குறிப்பிட்ட மலையகத் தமிழ் மக்களின் சமூக உணர்வை அவர், தெரிந்தோ, தெரியாமலோ சீண்டி பார்த்துள்ளார் என்ற உண்மை. அடுத்தது, அமைச்சர் சார்ந்த சமுதாயத்தையும் அவர் சொல்லாமல் சொல்லியிருக்கிறார் என்ற கொல்லும் சொல்.

### பாராமுகம்

அர்ச்சுனாவின் கூற்றை, அமைச்சர் சார்ந்த மலையகத்தமிழ்த்தலைவர்களும்கூட அரசியல் ரீதியாக மட்டும் பார்த்துள்ளனரோ என்று எண்ணும்போது, மேலும் வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை. குறிப்பாக, கொழும்பு வெள்ளவத்தையில் வாழும் 'குட்டி யாழ்பாண' தமிழர்கள் வாக்குகளை நம்பி தேர்தலில் தொடர்ந்து போட்டியிட்டு வரும் மனோ கணேசன் வகையறாக்கள்கூட இந்த விவகாரம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கவில்லை.

அர்ச்சுனா போன்றோர் இல்லாமலே, மலையகத் தமிழ் மக்கள் விடயத்தில், நாடு சுதந்திரம் அடைந்த காலம் தொடங்கி, இன்றுவரை 'இலங்கை தமிழ் சமூகமும் அதன் அரசியல் தலைமைகளும் பாராமுகமாகவே இருந்துள்ளன என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. குறிப்பாக, மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிப்பு விவகாரத்தில் அன்றைய பொன்னம்பலம் முதலான இலங்கைத் தமிழ் தலைவர்களின் நாடாளுமன்ற நடவடிக்கைகள் இன்றும் விவாதப் பொருளாகவே இருந்து வருகிறது.

பின்னர் தந்தை செல்வா அந்தப் புண்களுக்கு மருந்திடச் சென்றபோதுகூட மலையக தலைவர் சௌமியமூர்த்தி தொண்டைமான், தங்களைத் தங்கள் போக்கிலேயே விட்டுவிடுங்கள் என்றதவிர்க்க முடியாத முடிவை மறுக்க முடியாத வேறு காரண-காரணிகளுடன் விரித்துரைத்தார். ஆனால், இன்று அர்ச்சுனா போன்றோரின் கூற்று, அன்று புரையோடிப்போன புண், இன்னமும் உள்ளே ஆறவில்லை என்பதையே உணர்த்துகிறது.

இல்லாமலே, இடைப்பட்ட இனப்போர் காலகட்டத்தில் கடந்த தொண்ணூறுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பின் கையிலிருந்து அரச இராணுவம் யாழ்பாண நகரை மீண்டும் கைப்பற்றியபோது, இது போன்ற ஒரு விவாதம் அன்றைய தமிழ் மக்களிடையே தோன்றி, உடன் தானே மறைந்தது. விடுதலை புலிகள் அமைப்பின் கீழே யாழ்பாணம் இருந்த காலகட்டத்தில், நகரில் உள்ள, குளம், குட்டை மற்றும் தெருக்களின் பெயர்களில் இருந்த ஜாதி அடையாளங்களை அவர்கள் மாய்த்து, அவற்றிற்கு தங்களது மாவீரர்களின் பெயர்களைச் சூட்டினார்கள். ஆனால், இராணுவம் கையில் நகரம் மீண்டும் விழுந்தபோது, அந்தப் பகுதிகளுக்கு பழைய பெயர்களையே மீண்டும் வைத்து, அவற்றிற்கான பெயர்ப் பலகைகளில் சிங்களத்தையும் புகுத்தினார்கள். ஆனால், இவ்வாறு சாதி அடிப்படையிலான பெயர் மாற்றத்தை, யாழ்பாணத்திலேயே சில-பல ஆதிக்க சாதியினர் ஏற்றுக்கொண்டார்கள், வரவேற்றார்கள் என்றெல்லாம் அப்போது அறிய முடிந்தது.

### மாய்ந்துவிடவில்லை

காலம் செல்லச்செல்ல, அந்த எண்ணங்கள் மாய்ந்துவிடவில்லை என்றாலும், மறக்கப்பட்டு வந்தது. தற்போது, அர்ச்சுனா போன்ற 'அதிமேதாவி'களின் அறியாமையால், ஆறிப்போன தழும்புகள் குத்திக் கிழிக்கப்படுகின்றன. அந்தப் புண்கள் ஆறிவிடக்கூடாது என்று நேரடியாகவும் மறைமுகமாகவும் இன்றளவும் செயல்படும் ஆதிக்க சாதியினர் உள்ளனர் என்பதே உண்மை.

இதில் மறக்கப்பட்ட, மறுக்கப்பட்ட பிற உண்மைகளும் உள்ளன. ஒன்று, இனப்போரின் கடைசிக் காலகட்டத்தில், போராளியாக இறந்த வன்னி வாழ் மலையகத் தமிழ் மக்கள் எத்தனை பேர், என்பதற்குக் கணக்கில்லை. அவர்கள் தங்களது உரிமைகளுக்காகவும், உணவு-உறைவிடங்களுக்காகவும், உயிர் இழக்கவில்லை என்றபதே உண்மை. அந்த உண்மை சுடும், இனியாவது சுடவேண்டும்.

இரண்டாவதாக ஒரு கேள்வி உள்ளது. இனப்போர் முடிந்து, முப்பது ஆண்டுகளுக்கு பின்னர் 2012 மக்கள் தொகை கணக்கெடுப்பில் நாட்டில், இலங்கைத் தமிழ் மக்களின் எண்ணிக்கை அதீதமாக உயர்ந்து, மலையகத்தோர் குறைவான எண்ணிக்கையில் காணப்பட்டார்களே அந்த அதிசயத்தின் பின்னாலான அரசியல்தான் என்ன?

முப்பது வருட போரில் இலங்கை தமிழ் மக்களிடையே உயிரிழந்தோரில் பெருவாரியானவர்கள் இளைஞர்கள், இளைஞ0கள். அடுத்த தலைமுறையினரை

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# ஆறிப்போன...

4ம் பக்கத் தொடர்ச்சி..........

பெற்றெடுத்து உருவாக்கும் வயதினர். இறந்தவர்கள் போக, அந்த வயதையொத்த எத்தனையோ ஆயிரம் பேர், அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்து, அங்கேயே நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள். போததற்கு, அங்கிருந்தே, இங்குள்ளவர்களை இனப்பிரச்சினையின் பெயரால், சீண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பவர்கள். ஆனால், மலையக தமிழர்களில் எந்தவொரு காலகட்டத்திலும், அத்தனை கணிசமான எண்ணிக்கையில், போரிலோ, ஏதாவது தொற்று நோயிலோ, உயிரிழக்காதவர்கள்.

அது போலவே, அரசின் மீது பழியைப் போட்டுவிட்டு, பிற நாடுகளில் 'பொருளாதார அகதிகளாக' இடம்பெயரத் தெரியாத அப்பாவிகள். ஆனால் அந்தச் சமூகத்தினர்தான் கடைசியாக எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பில் 'காணாமல்போனவர்கள'. ஆதிகாரபூர்வமாக, தேசிய அளவில், மலையக தமிழ் மக்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்று அறிய முடிந்தது.

### சமூக நீதி வகுப்பு

உள்நாட்டிலேயே இந்த உள்குத்து போதாது என்று, இங்குள்ள சில அறிவாளிகள் (அறிவீலிகள்?) தமிழ் நாட்டில் இருந்து புதிது புதிதாக விவகாரங்களை இறக்குமதி செய்து வருகிறார்கள். அதில் மிக சமீபத்திய விவகாரம்தான், வேறு புகலிடம் எதுவும் இப்போதைக்காவது இல்லை என்ற நிலையில், அருண் சித்தார்த் என்ற அரசியல் முகவரி இல்லாத தனி மனிதன், தமிழ் நாட்டில் இருந்து தன்னைப் போன்றே அதிகம் அறியப்படதா திரைப்பட இயக்குநர் ஒருவரை இறக்குமதி செய்து 'பெரியாரிச அரசியலை' இங்கு விதைக்கப் பார்ப்பது.

இந்த இயக்குனர், சங்ககிரி ராஜ்குமார், தனது திரைப்படங்களைவிட, அண்மையில் நாம் தமிழர் கட்சி நிறுவனத் தலைவர் சீமான் குறித்து வெளியிட்ட கருத்துக்களே அவருடைய பெயர், தமிழ் நாடு செய்தியாளர்கள் மத்தியிலாவது சிறிது அறியப்படக் காரணமானது. சீமான், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனோடு எடுத்துக்கொண்டார் என்று தொடர்ந்து பிரச்சாரம் செய்து, வெளியிட்டு வரும் புகைப்படம், தன்னால் கம்ப்யூட்டரில் 'மார்பிங்' செய்து கொடுக்கப்பட்டதே என்ற உண்மையைப் போட்டுடைத்தார்.

இதைத் தொடர்ந்து, சீமானுக்கு, பிரபாகரனே தனது கையால் சமைத்துப் போட்டார், ஏகே-47 ரக துப்பாக்கியையும் கையாளுவதற்குப் பயிற்சி அளித்தார் என்பதெல்லாமே சுத்தப் பொய் என்றும் ராஜ்குமார் கூறினார். அந்த அலை அங்கே ஓய்வதற்கு முன்னரே, அவர் இங்கு வந்து, பெரியாரின் சமூக நீதி குறித்து வகுப்பெடுக்கத் தொடங்கி உள்ளார்.

குறிப்பாக, பெரியாருக்கு யாழ்பாணத்தில் சிலை வைக்கப் போகிறார் எனவும் ராஜ்குமார், தன்னை இலங்கைக்கு அழைத்தவர்களின் சார்பில் அறிவித்துள்ளார். கார்ல் மார்க்ஸ், லெலின், காந்தியடிகள் போன்றே, கொள்கை அளவில் பெரியாருடைய சிலையும் இங்கே அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

### எதிர் சக்தி

ராஜ்குமாருக்கு இங்குள்ள அரசியல் நீரோட்டம் குறித்துத் தெரியுமா, என்பது தெரியவில்லை. அதற்காக, இங்கு சமூக நீதி அரசியலுக்கான அவசியம் இல்லை என்றும் யாரும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இதுபோன்ற சென்சிடிவ்வான விடயங்களை இங்குள்ளோரே பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும். அல்லது அரசியல் ரீதியாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். வெளியாட்களிடம் இந்தப் பஞசாயத்தை விட்டுவிட்டால், அது இரண்டு பூனைகளுக்கும் அப்பத்தை பங்கு வைத்து கொடுத்த குரங்கின் கதையாகவே இருக்கும்.

அந்த விதத்தில், உள்ளூரிலேயே முகம் தெரியாத ஒருவரை இங்கே இறக்குமதி செய்து அரசியல் செய்வதில், எந்தவொரு பயனும் கிடையாது. மாறாக, புதிய பிரச்சினைகளே உருவாக்கும். மாறாக, இது போன்ற விடயங்கள் இங்கு எடுபடாது என்று வாளாவிருந்தால், அதுவும் பிரச்சினை, பின்னொரு நாள் பூதகாரமாக வெடிக்க வழி வகுக்குமே தவிர அதனை இல்லாததாக்க வழிகாட்டாது.

பெரியாரிச எதிர் பேச்சுக்கள் மற்றும் எதிர் வினைகள் இல்லாமலே, இங்கே கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக, சைவத்தின் பெயர் சொல்லி, சமகால இந்தியாவிற்கே உரித்தான இந்துத்வா அரசியல் அவ்வப்போது தோன்றி- மறைந்து வருகிறது. இந்தியாவில், குறிப்பாக தமிழ் நாட்டில், பெரியாரிசத்திற்கு எதிர் சக்தியாகவே இந்துத்வா அரசியல் தன்னை காட்டிக் கொண்டு வருகிறது.

தமிழ் நாட்டில், இரு தரப்பினரின் வெற்றி -தோல்வி என்ற கணக்கிற்குள் போகாமல, அது போன்றவொரு போட்டி இங்கேயும் தோன்றுமானால், அதன் பல்வேறு பரிமாணங்களை ஆராய்ந்து அறிந்து, உணர்ந்து அதனை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். காரணம், அமைச்சர் சந்திரசேகர் விவகாரத்தைக்கூட பெரியாரிசத்தோடு அடையாளப்படுத்தி அரசியல் செய்யும் வாய்ப்பு இங்கு உள்ளது. அதனை ஒட்டி, வெட்டி இந்துத்வா அரசியல் இங்கு மேலும் கால் ஊன்ற முயலலாம்.

### மத அடையாளம்

காரணம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், யாழ்பாணத்தில், காவி உடை, நெற்றியில் திருநீறு என்ற அடையாளங்களுடன் திருவள்ளுவர் சிலை ஒன்று நிறுவப்பட்டது. அப்போது, திருவள்ளுவருக்கு அவ்வாறன மத அடையாளங்களை அணிவிக்கலாமா, என்ற அரசியல் விவாதம் தமிழ் நாட்டில் உச்சக்கட்டத்தில் இருந்தது.

அந்தக் காலகட்டத்தில், யாழ்பாண சிலையின் புகைப்படத்தை வெளியிட்டு அங்குள்ள சில சமூக ஊடக போராளிகள், திருவள்ளுவர் இந்துவே என்று நிலைநிறுத்தப் பார்த்தனர். அந்த விவாதம், இன்றளவும் அவ்வப்போது உயிர்த்தெழுந்து கொண்டிருக்கிறது.

இது போதாது என்று, அண்மையில், இந்திய அரசு நிதி உதவி செய்த யாழ்பாண கலாச்சார மண்டபத்திற்கு திருவள்ளுவர் பெயரிட்டதை அங்குள்ள பத்திரிகைகளையும் முந்திக்கொண்டு. தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி செய்தியாக்கி இருந்தார். இது, தமிழ்நாட்டில் ஆட்சி செய்யும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசுடனான ஆளுநரின் மோதல் போக்கின் ஒரு கட்டமே.

அங்குள்ள பிரச்சினைகளை இங்கே முன்னெடுத்து அரசியல் செய்வது, கவைக்கு உதவாது என்பதே உண்மை. மாறாக, இதுவே மறக்கப்படவேண்டிய பிரிவினைகளை காலம் தாழ்த்தியாவது, யாழ்பாணத்தின் சமூக-அரசியல் பரப்பில் முக்கிய விவாத பொருளாகும் வாய்ப்பு உள்ளது. அதனை இங்குள்ளவர்கள் உணர்ந்து செயல்பட்டால்போதும்.



காலைக்கதிர்
Kalāikkathir

# உப்பாற்றுபால கடற்கரையில் துப்புரவு பணி

(ஹலால்தீன் )

கிண்ணியா நகர சபையால் கிளீன் சிறீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தினூடாக கிண்ணியா உப்பாற்று பாலத்தின் கடற்கரை பகுதிகள் துப்புரவு செய்யப்பட உள்ளன. இலங்கையின் சுற்றாடலை மேம்படுத்தும் எனும் தொனிப்பொருளில் அரச நிறுவனங்கள் சமூக அமைப்புக்கள் பொதுமக்கள் அனைவரும் இந்நிகழ்வில் பங்குபற்ற உள்ளனர்.

கடற்கரையோரப் பகுதிகளை துப்புரவு செய்யும் நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெற உள்ளது.

பைசல் நகர் நூராணியா கடற்கரை தொடக்கம் உப்பாறு பாலம் வரை உள்ள பகுதிகள் துப்புரவு செய்யப்படவுள்ளன.

# புலமைப் பரிசில் வென்ற மாணவருக்கு கௌரவிப்பு

(தில்சாத் பர்வீஸ்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல்சித்தியடைந்தமாணவர்களைக் கௌரவித்து பதக்கங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கும் நிகழ்வு மாஸ் பவுண்டேசன் ஏற்பாட்டில் புதன்கிழமை மாலை வேளையில் நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிந்தவூர் கோட்டத்திற்கு உட்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியடைந்த 54 மாணவர்களுக்கு நினைவுச்சின்னங்கள் மற்றும் பதக்கங்கள் போன்றவை வழங்கப்பட்டது. அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர், வலயக்கல்வி பணிப்பாளர் உள்ளிட்டோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்விற்கு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.எம். தாஹிர், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதி கல்வி பணிப்பாளர் (நிர்வாகம்) எம்.எச்.எம். ஜாபிர், கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச். றியாசா, கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதி கல்வி பணிப்பாளர் யு.எல்.எம். சாஜித், கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதி கல்வி பணிப்பாளரும் நிந்தவூர் கோட்டக் கல்வி பணிப்பாளர் எம்.எல்.எம். முத்தரைஸ், நிந்தவூர் அனைத்து பாடசாலை அதிபர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.








# முஸ்லிம் பெண்கள் கல்லூரியில் செஸ் விளையாட்டுப் போட்டிகள்

(ஹலால்தீன் )

கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் 2025 ஆம் ஆண்டுக்கான இல்ல விளையாட்டுப் போட்டி புதன்கிழமை உலக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

நீண்ட இடைவெளியின் பின் கல்லூரியில் 2025 ஆம் ஆண்டுக்கான இல்ல விளையாட்டுப் போட்டியின் முதல் அங்கமாக செஸ் மற்றும் கரம் போட்டிகள் நடைபெற்றன.

கல்லூரியின் முதல்வர் சட்டத்தரணி எஸ். நஸீரா நஜாத் தலைமையில் இப் போட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கிண்ணியா கோட்டக்கல்விப் பணிப்பாளர் ரியாஸ், கௌரவ அதிதியாக விளையாட்டுக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.அரபாத் முதலானோர் கலந்து கொண்டனர்.








# தேசிய மக்கள் சக்தியின் பூநகரி அலுவலகம் திறப்பு

தேசிய மக்கள் சக்தியின் பூநகரி பிரதேசத்திற்கான பொதுமக்கள் தொடர்பாடல் அலுவலகம் நேற்று (வியாழக்கிழமை) காலை திறந்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் கருணாந்தன் இளங்குமரன் கலந்து கொண்டு குறித்த கட்சி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

பிரதேச அமைப்பாளர் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.






## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# 50 ஆயிரம் இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்புகளின்றி அவதி

(துஷாரா, அபு அலா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலைவாய்ப்பின்றி 50 ஆயிரம் இளைஞர் யுவதிகள் உள்ளனர் என்றும், இது மாவட்டத்தின் சனத்தொகையில் 7 சதவீதமானவர்கள் என மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ரூமேனியா நாட்டிற்கு வேலைவாய்ப்புக்காக செல்லும் இளைஞர் யுவதிகளுக்கான நேர்முகத் தேர்வு புதன்கிழமை மட்டக்களப்பு கிரீன் மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு இவ்வாறு வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுப்பதற்காக நம்பிக்கையான நிறுவனங்கள் இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இவ்வாறு அதிகமான நிறுவனங்கள் மாவட்டத்திற்கு வருகை தந்து நம்பகத்தனமான முறையில் இளைஞர் யுவதிகளை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு அனுப்புகின்றபோது எமது மாவட்டத்தில் நிலவுகின்ற வேலைவாய்ப்பு பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை வேலைவாய்ப்பு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அனுசரணையுடன் அப்ரோன் குழுமத்தினால் மேற்படி ரூமேனியா நாட்டிற்கு வேலை வாய்ப்புக்காக இளைஞர் யுவதிகள் அனுப்பப்படவுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ருமேனியா நாட்டிலிருந்து வருகை தந்த ரூமேனியாநாட்டுபிரதிநிதிதிருமதிரொக்சானா தலைமையில் இடம்பெற்ற இந்த நேர்முகப் பரீட்சையில் மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளிலும் இருந்து சுமார் 350 இளைஞர் யுவதிகள் தோற்றியிருந்தனர். இதில் தெரிவு செய்யப்படுபவர்கள் 8 மாதகாலத்திற்குள் ருமேனியாவுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உ
முருகன் துணை

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# தைப்பூசத் திருநாள் !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ... ஆஸ்திரேலியா

எம்மைப் படைத்த பரம்பொருளினை வாழ்வெல்லாம் எண்ணிட வேண்டும் என்பதற்காக எங்களின் முன்னோர்கள் விடியும் ஒவ் வொரு நாளினையும் அந்தப் பரம்பொருளுக்கு உரிய நாளாகவே ஆக்கி அதற்கென்று ஒரு பெயரினையும் சூட்டி பக்தியின் பாதை யிலேதான் பயணித்து வந்திருக்கிறார்கள். அந்த வகையில் வரு டத்தின் இறுதி மாதமான மார்கழியினை தெய்வத்துக்குரிய மாத மாக்கி – திருவெம்பாவை என்றும், திருப்பாவை என்றும் பக்திப் பனுவல்களை அதிகாலை வேளையிலே ஆலயத்தில் பாடிப் பரவி நின்றார்கள். சைவம் என்றோ, வைணவம், என்றோ பார்க்காமல் அந்தப் பரம்பொருள் புகழ்பாடும் மாதமாகவே வருடத்தின் இறுதி மாதமான மார்கழியினை ஆக்கி விட்டார்கள். வருடத்தின் இறுதி மாதம் பரம்பொருளின் புகழ்பாடும் மாதமாக அமைத்தஎங்கள் முன்னோர் வருடத்தின் தொடக்கத்தையும் பரம்பொருளினை எண் ணி பக்திவழியிலேயே தொடங்கும் வண்ணம் ஆக்கிவிட்டார்கள் என்பதுதான் மிகவும் முக்கியமாகும்.பூமாதேவியைத் தொட்டு ஆதவனை அகமிருத்தி பஞ்சபூதங்களையும் வணங்கி நன்றி நவி லும் முகமாக தைப்பொங்கல்த் திருநாளினை வருடத்தின் தொட க்கமாகவே அமைத்த முன்னோர்களின் மகத்தான வாழ்வியல் நெறியினை வியந்துதான் பார்க்கவேண்டி இருக்கிறதல்லவா !

நட்சத்திரங்களை,நாட்களை,திதிகளைஎல்லாம்மனமிருத்தி அவை ஒவ்வொன்றும் உரிய வகையில் பரம்பொருளினைப் போற்றிக் கொண்டாடும் வகையில் பக்தித் திருநாட்களை ஒழுங்கமைத்த பாங்கினைப் பாராட்டியே ஆதல் வேண்டுமல் லவா ! மார்கழியில் ஆதிரை நட்சத்திரத்தை சிவனுடன் இணை த்து திருவாதிரைத் திருநாள் வருகிறதல்லவா ! மார்கழிமூலம் ஆஞ்ஞனேயருக்கு உரியதாக்கி அதனையும் திருநாளாக்கினார் களல்லவா ! தைப்பொங்கல் தைமாதப் பிறப்பாக அமைகிறது. தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது மனத்தைரியத்தையும், எதி ர்காலம் பற்றிய நம்பிக்கையினையும் நல்கிறதல்லவா ! ‘ ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய ‘ என்பது யாவர் மனத்திலும் பதிந்திருக்கும் பெரு மந்திரம் அல்லவா ! அந்த மந்திரச் சொல்லுக்கு உரித்தான தகம்பன் சாமியான முரு கனுடன் தையில் வரும் பூச நட்சத்திரத்தை எங்கள் முன் னோர்கள் இணைத்திருக்கிறார்கள். பொங்கலில் பிறந்த நம் பிக்கைக்கு எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படாது இருக்க வேண்டுமேயானால் அதற்கு பெருந்துணை அந்தக் கந்தப்பெருமானேதான். ஏனென்றால் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாகக் காட்சிதருபவர் எங்கள் கந்தப்பெருமானே! அந்தப் பெருமானின் திருநாளாய் மலர்வதுதான் தைப்பூச நன்னாள்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக கந்தப்பெருமான் விளங்குகின்றார்.அவரது அருங்கருணையால் அனைவருக்கும் அல்லலகன்று அகமகிழ்வு ஏற்பட வழி பிறக்கும் என்று அடியார்கள் அனைவருமே பெரு நம்பிக்கையுடனேதான் இருக்கிறார்கள். அடியார் ஓரடி நடந்தால் ஆண்டவன் நூறடி வருவான்.அடியார் நூறடி நடந்தால் ஆண்டவன் ஆயிரமடி வருவான் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். முருகா என்று ஒருமுறை அழைத்தால் – இம் மைக்கும் மறுமைக்கும் என்றுமே நல்லதையே முருகப்பெருமான் நல்குவான்.அந்த அளவுக்கு அளப்பெரும் ஆற்றல் கொண்டவன் முருகப்பெருமான்.

இதனால்த்தான் கலியுகத்தில் எவர்வாயிலும் முதலில் வருகின்ற வார்த்தை எது தெரியுமா ? ‘ முருகா ‘ என்பதேயாகும். ஓம் முருகா – ஓம்முருகா – என்று அழைக்கும் பொழுது , உள்ளமெலாம் பூரிக்கின்றது ! உடலிலே ஒருவித பரவசம் உருவாகிறது ! உணர்வுகள் தூய்மை அடைகின்றன.மயிலேறி அந்த மால்மரு கன் நிச்சயம் வந்திடுவான். வாழ்விருக்கும் வினையனைத்தையும் வேல் கொண்டு ஒழித்திடுவான் ! என்னும் தெளிவு அனைவருள்ளத்திலும் பிறக்கிறது.

அழகு, ஆற்றல்,கருணை, நிரம்பிய முருகப்பெருமானுக்கு என்று பல விசேட தினங்கள் அமைந்தி ருக்கின்றன ஆனாலும் ‘ தைப்பூசம் ‘ என்னும் திருநாளானது அடியவர்களால் முருகனுக்குரிய சிறப்புத் தினமாகக் கொள்ளப்பட்டுவருகிறது என்பது நோக்கத்தக்கத்தக்கதாகும். தைமாதத்தில் பௌர்ணமியில் வருகின்ற பூச நட்சத்திரத்தன்று முருகனுக்கு உகந்ததினமாகக் கொள்ளப்பட்டு நீண்ட காலமாக தைப் பூசம்



என்பது பெருவிழா வாக தெய்வத் திருநாளாக கொண்டாடப்பட்டு வருகிறது என்பது நோக்கத்த க்கது.

தைப்பூசத் திருவிழா என்பது இன்று, நேற்று , ஏற்பட்டதல்ல என்பது மனத்திருத்த வேண்டிய கருத்தெனலாம். இந்தத் திருநா ளானது ,எங்கள் தேவாரம் பாடிய செல்வக் குழந்தை திருஞான சம்பந்தப் பெருமானது காலம் முதல் கொண்டாடப்பட்டு வருகி றது என்பதுதான் மிகவும் முக்கியமாகும். அது மட்டுமன்றி பழைய இலக்கியங்களிலும் இவ்விழா பற்றி சொல்லப்பட்டி ருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.

பல தெய்வங்கள் பற்றிய வழிபாட்டினை நோக்கும் பொழுது முருக வழிபாடு என்பது மிகவும் பழைமை வாய்ந்தது என்றுதான் அறிந்த்து கொள்ள முடிகிறது. தைப்பூசம் என்னும் திரு நாளோடு முருகப் பெருமான் பல நிலைகளில் இணைக்கப்படுகிறார் என்பது இங்கு கருத்திருத்த வேண்டியதேயாகும். முருகன் என்னும் நாமம்கூட மிகவும் அர்த்தம் பொதிந்தாகக் கருதப்படுகிறது.முருகு – என்றால் இளமை.முருகன் – என்றால் அழகன் என்றும் என்றுமே இளமையானவன் என்றும் கருத்துக்கள் நிறைந்தே சொல்லப்படுகின்றன.முருகன் என்னும் பெயரினை எங்களின் அன்னைத் தமிழுடன் இணைத்துப் பார்க்கும் அடியவர்களும் பலர் இந்த அவனியிலே நிறைந்திருக்கிறார்கள்.அந்த வகையிலே தமிழில் காணப்படு கின்ற எழுத்துக்களை – வல்லினம், மெல்லினம் , இடையினம் என்று இலக்கணத்தார் வகைப்படுத்தி யிருக்கிறார் கள். ‘ முருகன் ‘ என்னும் பெயரினை உற்று நோக்கினால் அங்கே தமிழ்ன் மூவின வகை யான தன்மையும் ஒருங்கே இணைவதைக் கண்டு கொள்ளமுடியும். இதனால் முருகப் பெருமானை தமிழுடன் இணைத்துப் பேசுவார்கள்.அதுமட்டுமல்ல முருகன் என்றாலே தமிழே வடி வான வன் என்னும் ஒரு எண்ணமும் மேலோங்கி நின்று முருகப்பெருமான் தமிழ் மயமாகவே விளங்குகிறார் என்று சொல்லிப் பெருமைப்படும் நிலையும் இருப்பதையும் கண்டுகொள்ளலாம்.

பசித்திருந்து , தனித்திருந்து, விழித்திருந்து , படாத வேதனை களையெல்லாம் தாங்கிக் கொண்டு – அந்தப் பரம்பொருளை நோக்கி தவமிருந்து வரம்பெற்று – அப்படிப் பெற்ற வரத்தினால் பரம்பொருளின் அனுக்கிரகத்துக்கு ஆளாகி வந்தவர்கள் – பெற்ற வரத்தினைப் பேணாது அதனை தங்களின் சுய இச்சை களுக்காகப் பயன்படுத்துவது பொருந்தக் கூடியதா ? அது மட்டுமன்றி அந்தவரத்தை நல்வழியில் பயன் படுத்தாது – ஆணவத்தால் அற வழியை மறந்து தம் மனம்போன போக்கில் செயற்பட நினை ந்தால் என்னாகும். முடிவில் அழிவுதானே வந்து நிற்கும். பெற்ற வரத்தினைப் பேணிக் காக்காமல் மறவழியில் ஆணவத்துடன் செயற்பட்டான் சூரபதுமன்.தேவர்களையே சிறைப் பிடித்தான்.வரம் கொடுத்த பரம் பொரு ளையே மதியாது ஆணவத்தின் உச்சியில் ஏறி நின்றான். ஆணவம் எங்கு மேலோங்குகிறதோ அங்கு – வரமளித்த அந்த ஆண்டவனின் சக்தியானது எப்படியோ தோன்றி மறத்தை அழித்து அறத்தை ஓங்கச் செய்யும் என்பதுதான் உண்மையாகும். அரத்தினை நிலைநிறுத்த ஒரு சக்தி வெளிப்பட் டது. அந்தச் பெருஞ் சக்திதான் ‘ முருகப் பெருமான் ‘ என்னும் நிலையில் வந்தமைந்தது. ஆணவ இருளை , அகத்தை இருளை அகற்ற வேண்டுமேயானால் அங்கு ஒரு பேரொளி தோன்ற வேண்டும் அல்லவா ! அந்தப் பேரொளி எப்படி அவதாரமாக அமைந்தது என்பதைக் காண்போமா !

‘ அருவமும் உருவமாகி
அனாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமாய் நின்றஜோதி
பிளம்பதோர் மேனியாகி
கருணைகூர் முகங்களாறும்
கரங்கள் பனிரெண்டும் கொண்டு
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய ‘

என்று அந்தப் பேரொளியாக முருகனது பிறப்பைப் பற்றிக் கந்தபுராணம் இவ்வாறு சுட்டிக் காட்டுகிறது. பேரொளியாக முருகப் பெருமான் வந்த நாளாகவே தைப்பூசத் திருநாள் அமைகிறது என்பதுதான் முக்கியமாகும். இதனால் முருகப்பெருமானது ஆலயங்கள் தோறும் தைப்பூசத் திருநாள் பக்திபூர்வமாகவே கொண்டாடப்பட்டு வருகிறது என்று தைப்பூசத்துக்கும் முருகனுக்குமான தொடர்ப்பைப்பற்றி ஒரு கதை நெடுங்காலமாகவே வழக்கில் சொல்லப்பட்டு வருகிறது என்பதும் நோக்கத்தக்கது.

ஆணவத்தின் உச்சியிலிருந்து அட்டூழியம் செய்யும் அரக்கரை அழித்திட பரம்பொருளாம் சிவனால் உருவக்கப்படுகிறார் முருகப் பெருமான்.வரம் கொடுத்த தான் போகாமல் தன்னிலிருந்து வெளிப்படுத்திய சக்தியான முருகனைக் கொண்டே சரியான பாடம் புகட்டிட இறைவன் எண்ணுவதும் இங்கு நோக்கத் தக்கது. சிவனின் நெற்றிக் கண்ணில் இருந்து வெளியான சக்தியாய் முருகப் பெருமான் விளங்குகின்றார். பாலகனாய் இருக்கும் அவரை வரமும் உரமுமுடைய அரக்கரை அடக்கி ஆணவத்தை அழிக்க அனுப்பும் பொழுது – அவருக்கு உறுதுணையாக ஒரு பெருஞ்சக்தியாக உமையம்மன் ஒரு வேலினைப் பாலகனான முருகனுக்குக் கொடுக்கின்றார். அம்மை கொடுத்த சக்திவாய்ந்த வேல் என்னும் ஆயுதத்தால் அட்டூழியம் புரிந்த அரக்கனை வதம்செய்து முருகப் பெருமான அறமென்னும் வெற்றியினைப் பெற்ற தினமாகவும் தைப்பூச விழாவானது அமைகிறது என்று ஒரு கதையும் மரபாக வழக்கில் இருக்கிறது என்பதும் நோக்கத் தக்கதாகும்.

இதுமட்டுல் அல்லாமல் இன்னுமொரு கதையும் தைப்பூசத்துடன் முருகப் பெருமானை சம்பந்தப் படுத்த சொல்லப்படுவதும் நோக்கத்தக்கது. எம்பெருமான் சிவனால் பார்வதிதேவியாருக்கு மந்திரம் ஒன்று உபதேசிக்கப்படுகிறது.உபதேசிக்கும் வேளை அதனை முருகப்பெருமானானவர் மறைந்திருந்து கேட்ட தாகவும் , இதனை அறிந்த பார்வதிதேவி – கோபங்கொண்டு முருகனைச் சபிக்கின்றாராம். இதனால் முருகன் கோபித்துக் கொண்டு திருப்பரங்குன்றம் சென்று அமர்ந்து விடுகிறார். முருகனின் கோபத்தை நீக்க சிவனும் , பார்வதியும் முருகன் இருக்கும் இடமான திருப்பரங்குன்றம் சென்று சிவனும் , பார்வ தியும் கொடுத்த சாபத்தை மீளப்பெற்று முருகனை அரவணைத்த தினமே தைப்பூசம் என்றும் ஒரு கதை வழக்கில் இருந்து வருகிறது.

கதைகள் என்னும் பொழுது அத்தனையும் பலகாலமாகவே வழக்கில் நிறைந்தே வந்திருக்கின்றன. அந்தவகையிலேதான் முருகப் பெருமான் பற்றிய பலவித கதைகளும் மக்கள் மத்தியில் உருவாகி அப்படி உருவான கதைகள் அனைத்துமே ஏதோ ஒரு வகையில் தைப்பூசத்துடன் இணைக்கப்பட்டு விட்டன என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. முருகனது அவதார தோற்றத்தைக் கந்தபுராணம் காட்டுகின்ற பொழுது ‘ பிரம்மாய் நின்ற ஜோதிப் பிளம்பதோர் மேனியாகி – கருணைகூர் முகங்கள் முகங்கள் ஆ றும் கரங்கள் பனிரெண்டும் கொண்டு ஒரு திருமுருகன் ‘ வந் தான் என்று காட்டுவததைக் கருத்துவதுதான் மிகவும் முக்கியம். முருகப் பெருமான் என்னும் பொழுது அங்கே பிரகாசிக்கும் ஜோ தியே வெளிப்பட்டு நிறிறது. ஜோதி என்றால் பிரகாசம் என்று தானே அர்த்தமாகிறது.தைப்புசத்தன்று பௌர்ணமி தினமா கும்.பௌர்ணமி பெரு வெளிச்சம் அல்லவா ! அந்தப் பெரு வெளிச்சத்துடன் பிரம்மமாய் நின்ற ஜோதியாக உதித்த முருகப் பெருமானை இணைப்பது பொருத்தமாய் இருக்கிறதல்லவா !

தைபிறந்தால் வழிபிறக்கும். தைப்பொங்கல் சூரியனுக்குரியது. சூரியன் வெப்ப மயமானவன். சூரியனுக்குரிய பொங்கலையடுத்து வருகின்ற பௌர்ணமி

தொடர்ச்சி 8ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# தைப்பூசத்...

7ம் பக்கத் தொடர்ச்சி...........

சிறப்புடையது.அந்தத்தினத்தில் வருகின்ற பூசமும் சிறப்புடையது.இத்தகைய காரணங்கள் தைப்பூசத்துடன் முருகப் பெருமான் இணைக்கப்பட்டது பொருத்தமாய் இருப்பதாக தெரிகிறதல்லவா ?

தப்பூசம் மிகவும் முக்கியத்துவம் மிக்கது என்பதற்கு – சம்பந்தப்பெருமானே தனது தேவாரத்தில் குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது.

‘மைப்பூசும் ஒண்கண் மடநல்லூர் மாமயிலை
தைப்பூசும் நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புகழ் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய் ‘

சைவத்தமிழ் மக்கள் வாழுகின்ற தமிழ்நாடு, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா,பிரான்ஸ், கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, போன்ற நாடுகளிலும் – தமிழரல்லாத மக்கள் வாழுகின்ற கேரளப்பகுதிகளிலும்கூட தைப்பூசமானது திருநாளாகக் கொண்டாடப்படுகிறது என்பது நோக்கத்தக்கதாகும்.

முருகப்பெருமானை முன்னிறுத்தும் தைப்பூசம் தமிழர் வாழ்வில் பல முக்கிய நிகழ்வுகளுக்கும் இடமளி க்கும் திருநாளாகவும் விள ங்குகிறது என்பதும் மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம். வயலில் நெற்பயி ர்கள் முற்றி விளைந்திருக்கும் காலமிதுவாகும். முற்றிய நெல்லிருந்து புத்தரசி எடுப்பதும் தைப்பூசத்தில்த் தான் என்பதும் நோக்கத்தக்கது. இதனை ‘ புதிரெடுத்தல் ‘ என்று சிறப் புடன் கொண்டாடி மகிழுவதும் மனமிருத்த வேண்டியதேயாகும். புதிரெடுத்து புத்தரியினைக் கொண்டு பொங்கலிட்டு இறைவனுக்குப் படைத்து மகிழுவதும் தைப்பூச நன்னாளில் என்பதை நம்மில் பலரும் மறந்திருக்க மாட்டோம்.’ புதிரெடுத் தல் ‘ என்னும் சொல் லே மிகவும் ஆழமுடைய வாழ்வியல் தத்துவத்தை அறிவுறுத்தும் சொல்லாகும். அந்தக் கருத்தினை





அரங்கேற்றும் நன்னாளாய் தைப்பூசம் இருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டிய தேயா கும்.

தைபிறந்தால் வழிபிறக்கும் என்று சொல்லுவதை நாம் எவருமே மறப்பதேயில்லை. அதற்கான அர்த்தத்தைத் தைப்பூசத் திருநாள் நன்றாகவே நிறைத்தே வைத்திருக்கிறது. எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒருவருக்கு வாழ்க்கையிலே கல்வி அறிவு என்பது கட்டாயம் இருந்தே தீரவேண்டும்.‘ கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன் ‘ என்று ஒரு பாடசாலையில் மகுடவாசகமாய் பொறிக்கப்பட்டி ருப்பதைக் கண்டேன்.இதற்குப் பல அர்த்தங்கள் இருந்தாலும் அங்கு ‘ கற்றிடு ‘ என்பதுதான் முக்கியமாய் எனக் குள் உதயமானது. அப்படிக் கற்பதற்கு உரிய பருவத்தில் கற்றலை த்தொடங்க வேண்டும். அதனை த்தான் எங்களின் முன்னோர்கள் ‘ வித்தியாரம்பம் ‘ என்று வியந்து நின்றார்கள். அந்த வித்தியாரம் செய்வதற்கு உகந்த நாளாகத் தைப்பூசம் திகழ்கிறது என்பது மிகவும் முக்கியத்துவமாய் வாழ்வில் அமைகிறதல்லவா ! ஆலயங்களில் வித்தியாரம்பம் நடைபெறும். வீடுகளில் நடை பெறும். தைப்பூசத்தில் வித்தியாரம்பம் என்பது மிகவும் விசேடமா நது என்னும் கருத்து யாவர் மனத்திலும் பதிந்தே இருக்கிறத ல்லவா !

காது குத்துதல் என்பது அழகுடன் சம்பந்தப்பட்டதல்ல. அது ஆரோக்கியத்துடன் சம்பந்தப்பட்டதா கும்.அதனால்த்தான் அக்காலத்தில் ஆண்பிள்ளைகளுக்கும்,பெண்பிள்ளைகளுக்குக் காது குத்து வதுபோல் குத்தினார்கள்.காதுகுத்துதல் என்பது சுற்றஞ் சூழ இருந்து கொண்டாடி மகிழுகின்ற பெருங் கொண்டாட்ட மாகவே ஒரு காலத்தில் அமைந்திருந்தது. தாய்மாமன் மடியில் பிள்ளையினை வைத்துக் காதுகுத்துதல் என்பது மரபாகவே இருந்து வந் தது.அப்படிக் காதுகுத்தும் சிறப்பான குடும்ப விழாவினை நடத் துவதற்கு யாவரும் காத்திருக்கும் தினம் என்ன தெரியுமா அந்த நல்ல தினந்தான் தைப்பூச நன்னா ளாகும்.தைப்பூசத்தை மனமெ ண்ணி காதுகுத்தக் காத்திருக்கும் சுகமோ அது ஒரு தனியான சுகமாகும். அதனைச் சொன்னால் புரியாது . அனுபவித்தவர்களு க்குத்தான் அதன் ஆனந்தம் தெரியும். காதுகுத்த லோடு தைப்பூசம் நின்றுவிடுவதில்லை. வியாபாரம் செய்பவர்கள் புதுக்கணக்கினை ஆரம்பிப்பதும் தைப்பூசத்திலேதான். இந்தவகையில் பார்க்கின்ற பொழுது – சுப நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கவும், புது முயற் சிகளைத் தொடங்கௌம் உவப்பான தினமாக அமைந்திருப்பது தைப்பூசத் திருநாள்தான் என்பதுதான் மிகவும் முக்கியமாகும்.

வாழ்க்கையில் பல நல விஷயங்களுக்கு வழிசமைக்கும் சிறப் பான திருநாளான தைப்பூசத்தினை ஆலயங்களில் பக்தி பூர்வ மாகக் கொண்டாடுவார்கள். முருகனுக்கு உகந்த நாளாகவே அமைகின்ற காரணத்தால் முருகப்பெருமானுக்கு உகந்த காவடி கள் பலவற்றை அடியார்கள் அவனது சன்னதியில் எடுத்து ஆடிப் பாடி அவன் புகழ் பாடியே நிற்பார்கள். மலேசிய நாட்டில் பத்த மலை என்னும் பதியில் அமைந்திருக்கும் முருகப் பெருமானது ஆலயத்தில் சைவத்தமிழ் அடியார்களுடன் இணைந்து சீனமக்கள் பலரும் பக்தி பூர்வமாகக் காவடி ஆடிவரும் காட்சி பக்திப் பரவ சமாகவே அமையும் பாற்காவடி, பன்னீர்லு காவடி, புஷ்பக்காவடி, சந்தனக்காவடி, பறவைக்காவடி , என்று அடியார்கள் வகை வகையாய் காவடி களைத் தாங்கி ஆடலும் பாடலுமாய் இசையுடனும் தாளத்துடன் ஆடிவரும் காட்சியானது தைப்பூச நன்னாளை பூலோக கைலாசமாகவே மாற்றிக் காட்டி நிற்கும்.

ஆடலும் , பாடலும், பக்தியுடன் அமைந்த விழாவாக தைப்பூச திருநாள் அமைகிறது என்று மட்டும் எண்ணிவிடக் கூடாது. இந்த விழாவுடன் ஜோதிமயமான முருகப்பெருமானும் வந்து இணைகி றார் என்பதையும் கருத்திருத்த வேண்டும். இறைவனை ‘ ஒளிவ ளர் விளக்கே ‘ என்கிறோம். ‘ மாமணிச் சோதியான் ‘ என்கி றோம். ‘ சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே ‘ என்கிறோம்.‘ அளம்பரும் ஜோதி ‘ என்கிறோம். ‘ தீபமங்கள ஜோதி நமோ நம‘ என்று பாடுகிறோம்.இவையனைத்துமே இறைவனுக்குமிகவும்பொருத்தமானஇலக்கணங்களேயாகும். அந்தவகையில் முருகன் என்னும் அளப்பருந் தெய்வமும் மிகப்பெரிய ஜோதியே. அந்த ஜோதியினைக் காட்டும் பெருவிழா திருவிழா மாநிலமெங்கணும் பட்டொளி பரப்பும் பௌர்ணமி நன்னாளான தைப்பூசத் திருநாளே யாகும். பக்தியுடன், வாழ்வியலுக்கு பொருத்தமான விஷயங்களையும் இணைத்து நிற்கும் இந்தப் புனிதமான திருநாளுக்கு ‘ தகப்பன் சாமியின் திருநாள் ‘ என்று பெயரிட்டு பெருநிறை வடைவோம் வாருங்கள் !

# பகவத் கீதையின் தத்துவ உண்மைகள்: ஒரு அறிமுகம்

பகவத் கீதையானது மனித வாழ்க்கையின் ஆழ்ந்த உண்மைகளை ஆராயும் ஒரு தத்துவ நூலாகும். கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு போர்க்களத்தில் வழங்கிய உபதேசமாக இருந்தாலும்,அதன்தத்துவங்கள்அனைத்துமனிதர்களுக்கும் வாழ்க்கையின் அர்த்தத்தை விளக்கும் நித்திய கருத்துக்களாக உள்ளன. பகவத் கீதையின் 700 சுலோகங்கள் ஒவ்வொன்றும் மனிதனின் சிந்தனைக்குத் தெளிவை வழங்கும் பூரண தத்துவ மரபாக விளங்குகின்றன. இந்நூல் ஆத்மா, கர்மா, தர்மம், மோக்ஷம் போன்ற அடிப்படையான வாழ்வியல் சிக்கல்களுக்கான தீர்வுகளை அளிக்கிறது. அதன் தத்துவங்கள் ஒவ்வொன்றையும் ஆழமாக ஆராய்வோம்.

பகவத் கீதையின் முதன்மையான தத்துவமாக ஆத்மாவின் நிலை விளக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணர் சொல்வதாவது, ஆத்மா மரணத்தை வென்று நிற்பது, அது பிறவி மரணங்களின் சுழற்சியில் இருந்து விடுதலையாக நிலைத்திருப்பது. ‘ந ஜாயதே ம்ரியதே வா கதாசின்’என்ற அவரது வார்த்தைகள் ஆத்மா பற்றிய மறைவில்லா சத்தியத்தை வலியுறுத்துகின்றன. மனித உடல், அது உடைய கடமைகள் அனைத்தும் பாவனையானது; ஆனால் ஆத்மா, அதனுடைய தன்மையை மாற்றாமல் பரமாத்மாவுடன் ஒருங்கிணைந்ததாகவே இருக்கிறது. இத்தத்துவம் உலகியலான சிக்கல்களால் மனம் குழப்பமடையும் மனிதனுக்கு தனக்குள் உள்ள ஆத்மாவின் நிரந்தர தன்மையை உணருவதன் மூலம் மன அமைதியை அளிக்கின்றது.

கர்ம யோகம் என்பது பகவத் கீதையின் இதயமாகும். மனிதனின் செயல்பாடுகள் எவ்விதம் இருந்தாலும், அவற்றின் விளைவுகளை எண்ணாமல் செயல்படவேண்டும் என்பதே கிருஷ்ணரின் கருத்து. ‘கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசன’என்ற சுலோகத்தின் மூலம் செயல்பாடுகளை பொறுப்புடனும் பற்றில்லாமலும் செய்ய மன அழுத்தத்திலிருந்து விடுபட முடியும் எனக் கூறுகிறார். இதன் மூலம் வாழ்க்கையின் ஒவ்வொரு செயலுக்கும் பொருத்தமான நியாயத்தை வழங்குகிறார். விளைவுகளை எண்ணி செயல்படும் மனிதனின் மனதில் ஏற்படும் ஏமாற்றங்களுக்கும் பயங்களுக்கும் இது ஒரு தீர்வாக அமைகிறது. மேலும், கர்ம யோகம் வாழ்க்கையை தர்மத்தின் அடிப்படையில் அமைக்கவும், அதை சுதந்திரமாக அணுகவும் வழி காட்டுகிறது.

தர்மத்தின் கோட்பாடு மனித வாழ்வின் ஒழுக்க நெறிகளை ஒருங்கிணைக்கிறது. கிருஷ்ணர் கூறுவது ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய தனிப்பட்ட தர்மம் உள்ளது, அதைத் தாண்டி பிறரின் தர்மத்தில் இறங்குவது அவசியமல்ல. ‘ஸ்வதர்மே நிதனம் ஸ்ரேய:’என்று அவர் விளக்குவதே, தமக்குரிய வாழ்க்கை பாதையை அறிந்து அதில் செயல்படுதல். இது மனிதனுக்கு சரியான செயல்பாட்டையும் நேர்மையையும் அளிக்கிறது. உலகின் பல அமைதியின்மை நிலைகள் இந்த தர்மத்தை உணராததிலேயே உள்ளது. தனித்துவத்தை பின்பற்றுவதன் மூலம் தான் சமுதாயத்திற்கும் வாழ்க்கைக்கும் ஒரு நிலையான அமைதி ஏற்படும்.

சமச்சித்தம் என்பது மனநிலையின் நிலைப்பாட்டை வலியுறுத்துகிறது. வெற்றி–தோல்வி, இன்பம்–துன்பம் போன்ற நிலைகளில் ஒரே சமநிலையை உருவாக்கும்போது, மனம் சீராக செயல்பட முடியும். கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு இதை புரியவைக்கும் விதத்தில், போர்க்களத்தில் போரின் விளைவுகளைப் பற்றி எண்ணிக்கொள்ளாமல் தர்மத்தின் அடிப்படையில் கடமையைச் செய்யத் தோழகளிக்கிறார். இது ஒருவரின் மனதிற்கும் செயல்பாட்டிற்கும் நேர்மையை அளிக்கிறது. வாழ்க்கையில் எதிர்பார்ப்புகளின் அடிமையாகிவிடாமல், செயல்களின் மூலம் உண்மையான மகிழ்ச்சியை அடைவதற்கு வழி வகுக்கிறது.

பகவத் கீதையின் ப்ரக்ருதி மற்றும் புருஷா பற்றிய தத்துவம் மனித வாழ்க்கையின் இயல்புகளை விளக்குகிறது. ப்ரக்ருதி என்பது உலகத்தின் அனைத்து மாற்றங்களுக்கும் அடிப்படை; ஆனால் புருஷா அதற்கு மாறாத ஆதாரமாக விளங்குகிறது. ‘ப்ரக்ருதிம் புருஷம் சைவ’என்ற சுலோகத்தில், கிருஷ்ணர் இந்த உலகத்தின் இயல்புகளையும் அதனுடைய முழுமையான அடிப்படையையும் விளக்குகிறார். இந்த தத்துவம் உலகத்தின் நிலையாமையை உணரச்செய்கிறது. இத்தகைய உணர்வு, வாழ்க்கையின் அன்றாட பிரச்சனைகளை சிறியதாக காணவும், ஆழமான ஆன்மிகத்தில் மனதை கவனம் செலுத்தவும் உதவுகிறது.

பக்தி யோகம் என்பது பகவத் கீதையின் ஆன்மீக அடிப்படை. மனதில் பக்தியை வளர்த்து, தெய்வத்தின் மீது முழுமையான நம்பிக்கை செலுத்துவது தான் இதன் அடிப்படை யோகம். ‘அனன்யாச்சிந்தயந்தோ மாம்’என்ற சுலோகத்தின் மூலம், பக்தியின் மூலம் மனதை தூய்மையாக மாற்றுவதற்கான வழியைக் கூறுகிறார். பக்தியின் மூலம் ஒருவரின் மனதில் உள்ள பயங்களையும் சந்தேகத்தையும் நீக்கி, ஆன்மிக சாந்தியுடன் முழுமையான மனநிறைவை அடைய முடியும்.

மோக்ஷம் என்பது பிறவி மரண சுழற்சியிலிருந்து விடுதலையாகும். கிருஷ்ணர் கூறுவது, மனிதன் தெய்வத்தின் அடியில் சரணடைந்து செயல்படும்போது, அவன் இந்த சுழற்சியிலிருந்து தப்பிக்க முடியும். ‘சர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ’என்ற சுலோகத்தில், அனைத்து பற்றுக்களையும் விட்டுவிடும் நிலையை அடைவதற்கான வழியை விளக்குகிறார். மோக்ஷம் என்பது மனித வாழ்க்கையின் இறுதி இலக்காகும்; அதை அடைய பகவத் கீதையின் தத்துவம் மனிதனை வழிநடத்துகிறது.

குணத்ரயங்கள் என்பது மனித மனதின் மூன்று அடிப்படை நிலைகளை விளக்குகிறது. சத்துவம், ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவை மனதின் செயல்பாடுகளை தீர்மானிக்கின்றன. சத்துவம் தூய்மையை, ரஜஸ் உற்சாகத்தையும் தமஸ் சோம்பலையும் குறிக்கின்றன. இந்த மூன்று நிலைகளை சமநிலைப்படுத்தும் விதத்தில் செயல்படும் மனிதன், மன அமைதியுடனும் உயர்ந்த செயல்திறனுடனும் வாழ முடியும். கிருஷ்ணர் மனநிலையின் இந்த மூன்று அம்சங்களை அறிந்து அதன் பாதகங்களைத் தாண்டி ஆன்மீக வளர்ச்சியை அடைவதற்கு வழிகாட்டுகிறார்.

பகவத் கீதையின் தத்துவ உண்மைகள் வெறும் கோட்பாடுகளாக மட்டுமே இல்லாமல், அவை மனித வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் வழிகாட்டும் உன்னத கருத்துகளாகும். இது மனித மனதின் குழப்பங்களைச் சரி செய்யவும், மனநிலைக்கு சமநிலையை வழங்கவும், ஆன்மீக சாந்தியை அடையவும் ஒரு பரிபூரண வழிகாட்டியாக விளங்குகிறது. மனிதன் உலகத்தின் சுழற்சியில் சிக்கிக்கொள்ளாமல் ஆன்மாவின் நிலையை உணர்ந்து செயல்படுவது தான் பகவத் கீதையின் தூய நோக்கம்.

ஜமுனாராணி சிவலோகநாதன்

# அதிகாரிகளின் பிழையான செயல்களால் பஸ் உரிமையாளர்களுக்கு பெரு நட்டம்

## சங்கச் செயலாளர் பைறூஸ் தெரிவிப்பு

(ஹமீட்)

தென்கிழக்கு கரையோரப் பிரதேச தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் புதன்கிழமை காலை 11.30 மணிக்கு அட்டாளைச்சேனை லொயிட்ஸ் ஹோட்டலில் சங்கத்தின் தலைவர் எஸ்.ஐ.எம்.எஸ்.ஏ.மௌலானா தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தென்கிழக்கு கரையோரப் பிரதேச தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சங்கத்தின் செயலாளர் எம்.எஸ்.பைறூஸ் நீண்ட உரையை நிகழ்த்தியதுடன் உறுப்பினர்களின் பல கேள்விகளுக்கும் தகுந்த விளக்கங்களுடன் பதில் வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கு சங்கத்தின் செயலாளர் எம்.எஸ்.பைறூஸ் உரையாற்றுகையில், கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தகுதியில்லாத பணிப்பாளர் நாயகம் மற்றும் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட தகுதியில்லாத திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரின் பிழையான செயற்பாடுகள் காரணமாகவே பஸ் உரிமையாளர்கள் பெரும் நஸ்டத்தை எதிர்நோக்கியுள்ளதுடன் பலரும் அத்தொழிலைவிட்டு விலகிச்செல்கின்றனர். அத்தோடு கிழக்கு மாகாணத்தில் பெரும் ஊழல், மோசடிகளுக்கும் காரணமாக அமைந்துள்ளனர்.

முறைகேடாக புதிய போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவதுடன், தாம் விரும்பியவாறு அனுமதிப்பத்திரங்களை நீடித்துக்கொடுத்தும் வருகின்றனர். போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள பஸ் உரிமையாளர்களை அழைத்து அவர்களுடன் கலந்தாலோசிக்காமல் இவ்வாறான முறைகேடான செயற்பாடுகளை தொடர்ந்தும் கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினர் மேற்கொண்டு வருகின்றமை மிகக் கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான பிழையான நடைமுறையால் இப்பிராந்திய போக்குவரத்தில் போட்டித்தன்மை ஏற்பட்டு அதீகமான வீதி விபத்துக்கள் ஏற்படவும் வழி வகுக்கின்றது. போக்குவரத்து நேர அட்டவனை ஒன்று நடைமுறையில் இருக்கும் நிலையில், புதிய அனுமதிப்பத்திரமும், பிரதேசத்திற்கு பிரதேசம் நீடித்த அனுமதிப்பத்திரமும் வழங்கப்படும்போது, கடமையில் ஈடுபடுகின்ற தனியார் பஸ்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுவதுடன் தமது வருமானத்தையும் இழக்கின்றனர். இதனால் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு சம்பளத்தைக்கூட வழங்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு பஸ் உரிமையாளர்கள் தள்ளப்படுகின்றனர்.

கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமும், தற்காலிக திட்டமிடல் பணிப்பாளரும் அதிகார துஸ்பிரயோகத்தை செய்து பாரிய ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருவதை நாம் பல ஆதாரங்களுடன் பல முறை முறையிட்ட போதிலும் அவர்கள் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பது புரியாத புதிராகவுள்ளது.

புதிய ஆட்சியில் நியமிக்கப்பட்டுள்ள புதிய கிழக்கு மாகாண ஆளுநரை சந்தித்து சகல முறைப்பாடுகளையும் ஆதாரங்களுடன் கையளித்திருக்கின்றோம். நிச்சயம் விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் நம்மிடம் தெரிவித்துள்ளார். ஊழல் மோசடிக்காரார்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

வருமானத்தைத் தாண்டி மக்களுக்கான பெரும் சேவையாகக் கருதியே போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றோம். அதிகாரிகளின் பல சட்டத்திற்கு முரணான விடயங்களை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருக்கின்றோம். அதற்காக எமது சங்கத்தினர் ஒத்துழைப்பு வழங்கியதையிட்டு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எப்போதும் சங்கமாக, அமைப்பாக தொழிற்சங்கமாக செயற்படும்போதே எமது உரிமைகளையும், நலன்களையும் வெற்றி கொள்ளலாம். அவ்வாறில்லாத போது, அதிகாரிகள் எம்மை ஒடுக்கி, அடக்கி அவர்களது அஜந்தாவை நம்மீது திணித்துக் கொள்வர்கள். அந்த வகையில் ஒரு தொழிற்சங்கமாக ஒற்றுமையுடன் நாம் தொடர்ந்தும் பயணிக்க வேண்டும் எனக்கேட்டுக்கொள்கிறேன் என தனதுரையை நிறைவு செய்து கொண்டார்.

இங்கு சங்கத்தின் பொருளாளர் யூ.எல்.அஸ்வர், உப பொருளாளர் ஏ.எம்.அர்சாட், உப தலைவர் பீ.நவநீதன், உப செயலாளர் டீ.டெனிஸ், மேலதிக ஆலோசகர் ஏ.எம்.இம்றாஸ் ஆகியோரும் கலந்து கொண்டதுடன் அங்கத்தவர்கள் பலரும் தமது கருத்துக்களையும் தெரிவித்தனர்.



# சட்டவிரோதமாக பொருள்களுடன் கற்பிட்டி தளுவையில் மூவர் கைது

(சியாஜ்)

கற்பிட்டி தளுவை பகுதியில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட ஆயிரத்து நூற்று ஐம்பத்தெட்டு (1158) கிலோகிராம் மற்றும் அறுபது (60) கிராம் உலர் இஞ்சி மற்றும் நாற்பத்தைந்து (45) கிலோகிராம் உலர் கருவாடு, 01 கெப் வண்டியுடன் மூன்று (03) சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடல் வழிகள் ஊடாக கடத்தல் உட்பட சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்த்து தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கடற்கரைகளை உள்ளடக்கி கடற்படை வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அதன்படி, வடமேற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான தம்பபன்னி கடற்படை பிரிவால் கற்பிட்டி தளுவை பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமான கெப் வண்டியொன்று சோதனையிடப்பட்டது. அங்கு கெப் வண்டியில், சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட (32) பொதி செய்திருந்த பைகளில் ஆயிரத்து நூற்று ஐம்பத்தெட்டு (1158) கிலோகிராம் காய்ந்த இஞ்சி, நாற்பத்தைந்து (45) கிலோ காய்ந்த கருவாடு, ஒரு கெப் மற்றும் மூன்று சந்தேகநபர்கள் ஆகியோருடன் கடற்படையினர் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் மூவரும், உலர் இஞ்சி, உலர் கருவாடு மற்றும் கெப்வண்டியுடன்மேலதிகசட்ட நடவடிக்கைகளுக்காககட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் எனத் தெரித்துள்ளனர்.

# சொற்பொழிவு

(சியாஜ்)

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் புத்தளம் கிளை எதிர்வரும் ரமழான் மாதத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள சமூக மாற்றத்தில் ஆசிரியர்களின் வகிபாகம் என்னும் கருப்பொருளில் ஆசிர்யர்களுக்கான விஷேட சொற்பொழிவு இன்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 4.30 மணிக்கு புத்தளம் வான் வீதியில் உள்ள இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற உள்ளது.

இந் நிகழ்வின் கருத்துரையை ஓய்வு நிலை அதிபரும் அப்ரார் பவுண்டேஷன் இணைப்பாளருமான அஷ்ஷெய்க் எம்.ஜே.எம் மன்சூர் நிகழ்த்த உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனை நீதிமன்ற வளாகத்தில் கைதி ஒருவர் தப்பியோட்டம்

(பாறுக் ஷிஹான்)

நீதிமன்றில் வழக்கு நடைபெற்ற வேளை தப்பிச்சென்ற சந்தேக நபரை தேடும் பணியில் கல்முனை தலைமையக பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று குறித்த சந்தேக நபர் அம்பாறை மாவட்டம் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு தொடர்பாக அழைத்து வரப்பட்டு விசாரணையின் பின்னர் பிணை வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும் குறித்த சந்தேக நபருக்கு பிணையாளிகள் இன்மையால் நீதிமன்ற உள்ளக வளாகத்தில் உள்ள சிறை கூடத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்.

# பருத்தித்துறை மதுவரி உத்தியோகத்தர்களின் நடவடிக்கையில் கோடா மீட்பு; இருவர் கைது

(சுபேசன்)

பருத்தித்துறை மதுவரி நிலைய உத்தியோகத்தர்களின் நடவடிக்கையில் செவ்வாய்க் கிழமை பிற்பகல் கசிப்பு உற்பத்திக்கு தயாராக இருந்த ஒருதொகுதி கோடாமீட்கப்பட்டிருப்பதுடன் -சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை-யாக்கரைப் பகுதியில் இருந்து கசிப்பு உற்பத்திச் சந்தேக நபர்களை பின்தொடர்ந்து வந்த நிலையில் சாவகச்சேரி-சரசாலைப் பகுதியில் வைத்து மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

பருத்தித்துறை மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி ரஷிகரன் தலைமையிலான குழுவினரே மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யடிஹேறன அல் முஸ்தபா மகா வித்தியாலயம் தரம் – 5 புலமைப்பரிசிலில் சிறந்த பெறுபேறு

(கேதீஸ்)



மேல் மாகாண களனி வலய யடிஹேன அல் முஸ்தபா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் நடந்து முடிந்த புலமைப் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

ஆதிப் 151 புள்ளிகளையும் வருண் 149 புள்ளிகளையும் ஆபித் 148 புள்ளிகளையும் பெற்று சித்தி பெற்றுள்ளனர்.

அத்துடன் இம் முறை பரீட்சைக்கு தோற்றிய 19 மாணவர்களில் 100 புள்ளிகளுக்கு மேல் 13 மாணவர்களும், 70 புள்ளிகளுக்கு மேல் 17 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

இவர்களை பாடசாலையின் அதிபர் சம்ரிறாள், பிரதி அதிபர் சிவபாலன், கற்பித்த ஆசிரியை கிருஷ்ணவேணி, பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை நலன்புரி சங்கங்கள் வாழ்த்துகின்றன.

# மரதன் ஓட்டத்தில் வெற்றி பெற்ற மாணவருக்கு பெறுமதிமிக்க பரிசு

(றமீஸ்)







அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் இவ்வாண்டுக்கான இல்ல விளையாட்டுப் போட்டியின் முதல் போட்டி நிகழ்வாக மரதன் ஓட்டப்போட்டி நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

இப்போட்டியில் முதலாமிடம் பெற்ற பிர்தௌஸி இல்ல வீரர் ரி.றிஸ்கி அகமட் பெறுமதி மிக்க சைக்கிள் பரிசாகப் பெற்றுக் கொண்டார்.

அதிபர் ஏ.எல்.நசீபா இக்பால் தலைமையில் பாடசாலை வளாகத்தில் ஆரம்பமான மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சிகளின் முதல் நிகழ்வாக மரதன் ஓட்டப்போட்டி சுமார் ஐந்து கிலோமீற்றர் தூரம் கொண்டதாக அமைந்திருந்தது.

பிர்தௌஸி, சீராஸி, கஸ்ஸாலி ஆகிய இல்லங்களைச் சேர்ந்த சுமார் 30 மாணவர்கள் இப்போட்டிக்காக பங்கு பற்றினர். பாடசாலை வளாகத்தில் ஆரம்பமான இப்போட்டி அக்கரைப்பற்று நகர்ப் பகுதியின் பல்வேறு உள்ளக வீதிகள் மற்றும் பிரதான வீதிகள் போன்றவற்றின் மூலமாக மாணவர்கள் இப்போட்டிக்கான குறித்த தூரத்தினை கடந்தனர்.

புள்ளிகளின் அடிப்படையில் சீராஸி இல்லம் 182 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தினையும், 172 புள்ளிகள் பெற்ற பிர்தௌஸி இல்லம் இரண்டாமிடத்தினையும், மூன்றாமிடத்தினை 110 புள்ளிகள் பெற்றுக் கொண்ட கஸ்ஸாலி இல்லமும் பெற்றுக் கொண்டது.

இதன்போது பிர்தௌஸி இல்லத்தினைச் சேர்ந்த ரி.றிஸ்கி அகமட் என்ற மாணவர் முதலாமிடத்தினை பெற்றுக் கொண்டு பெறுமதி மிக்க சைக்கிளைப் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, பிர்தௌஸி இல்லத்தைச் சேர்ந்த எம்.இஸட் சிறான் இரண்டாமிடத்தினையும், சீராஸி இல்லத்தினைச் சேர்ந்த எம்.எம்.அதீக் அகமட் மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியில் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்ட வீரருக்கு பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் எப்.ஏ.குத்தூஸ் மூலம் அன்பளிப்புச் செய்யப்பட்ட சைக்கிள் பரிசாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது பிரதி அதிபர்களான எம்.ஏ.சலாகுதீன், என்.எம்.சாலிஹ், பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் சபூர் ஆதம், பழைய மாணவர் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், துறைசார் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகள் மனு கையளிப்பு

-(அஸ்லம் எஸ்.மௌலானா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பு மனுக்கான திகதி அறிவிப்பதற்கு முன்பு தேர்தல் ஆணைக்குழுவானது சகல அரசியல் கட்சி செயலாளர்களையும் சந்திக்க வேண்டும் என்று சில முக்கிய அரசியல் கட்சிகள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.-இது தொடர்பான மகஜர் ஒன்று தேர்தல் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்கவிடம் நேற்று (வியாழக்கிழமை) கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனாதிபதி



சட்டத்தரணி நிசாம் காரியப்பர் எம்.பி, மலையகமக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி உள்ளிட்டோர் தேர்தல் செயலகத்திற்கு நேரடியாக சென்று இம்மகஜரை கையளித்துள்ளனர்.

மகஜரை பெற்றுக் கொண்ட தேர்தல் ஆணையாளர், குறித்த கோரிக்கையை சாதகமாக பரிசீலிப்பதாக உறுதியளித்துள்ளார் என்றும் நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

# நுவரெலியா மாவட்ட செயலராக திருமதி துஷாரி தென்னகோன்

(கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தின் புதிய மாவட்ட செயலாளராக திருமதி துஷாரி தென்னகோன் புதன்கிழமை பதவியேற்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தாவரவியல் மற்றும் வேதியியலில் இளங்கலை விஞ்ஞானப் பட்டமும், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்ற திருமதி துஷாரி தென்னகோன், நுவரெலியா மாவட்டச் செயலாளராக வருவதற்கு முன்னர் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராக (நிர்வாகம்) பணியாற்றினார்.





மேலும், திருமதி துஷாரி தென்னகோன் மாத்தளை மற்றும் ஹரிஸ்பத்துவ உதவி பிராந்திய செயலாளர், மாகாண பிராந்திய செயலாளர், மத்திய மாகாண சுகாதார அமைச்சின் உதவி செயலாளர், விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்), பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்), பணிப்பாளர் (நிர்வாகம்) போன்ற பல பதவிகளை வகித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளர் (நிர்வாகம்) தினிகா கவிசேகர, மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) ஷாலிகா லிடகும்புர மற்றும் அரச அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# யாழ்ப்பாணத்தில் கற்பகம் பனை சார் உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம்

(சுபேசன்)

யாழ்ப்பாணம்-ஆரிய குளப் பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) வடமாகாண தொழிற்துறைத் திணைக்களமும்-பனை அபிவிருத்திச்சபையும் இணைந்து 'கற்பகம்' பனை சார் மற்றும் உள்ளூர் உற்பத்திகளின் விற்பனை நிலையம் திறந்து வைத்திருந்தனர்.

பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக பெருந்தோட்டப் பிரதி அமைச்சர் சு.பிரதீப் கலந்து கொண்டு விற்பனை நிலையத்தை திறந்து வைத்திருந்தார்.

அத்துடன் பனம் மரமும் விற்பனை நிலைய முன்றிலில் நாட்டி வைக்கப்பட்டது.





மேலும் பனை அபிவிருத்திச் சபையின் காமையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்விச் சேவைகளை திறம்பட வழங்கவும்

## கிழக்கு ஆளுநர் பணிப்பு

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது, மாகாண கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்களத்தில் பணிபுரியும் அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

அதிகாரிகளிடம் உரையாற்றிய ஆளுநர் -

கல்வித் துறையில் சேவைகளை வழங்கும் ஒரு நிறுவனம் என்ற வகையில், தாமதமின்றி தங்கள் சேவைகளை திறமையாகவும் திறம்படவும் வழங்க வேண்டும் என்று கூறினார்.



நிறுவனப் பிரச்சினைகள் மற்றும் சேவை வழங்கலில் கருத்தில் கொள்ள வேண்டிய பிரச்சினைகள் குறித்து நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றது. மேலும், ஊழியர்கள் தங்கள் நிறுவனப் பிரச்சினைகளை முன்வைக்கவும் வாய்ப்பும் கிடைத்தது.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.02.2025இல் வெளியிடப்பெற்றது